விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25

ஒலி 266 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 25 செவ்வாய்க்கிழமை (10.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## சித்திரவதைகள், நில அபகரிப்பை இலங்கை நிறுத்த வேண்டும்

### ஜெனிவாவில் அமெரிக்கா வேண்டுகோள்

(ஜெனிவா)

சித்திரவதைகள் மற்றும் நில அபகரிப்பை இலங்கை நிறுத்த வேண்டும்என ஜெனிவா வில் அமெரிக்கா வேண்டு கோள் விடுத்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மேற் கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் சித்திர வதைகள் தொடர்வது குறித்து கவலை வெளியிட்டுள்ள அமெரிக்கா நீண்டகாலமாக காணப்படும் தண்டனையி லிருந்து விலக்களிக்கப்படு தல் நல்லிணக்கத்திற்கான தடையாகக்காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

பொறுப்புக்கூற லிற்குத் தீர்வைக் 15

## தேர்தலை முன்னிட்டு பாடசாலைகளுக்கு 20ஆம் திகதி விடுமுறை

(கொழும்பு)

செப்ரெம்பர் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு எதிர் வரும் 20ஆம் திகதி நாடளா விய ரீதியில் உள்ள அனைத் துப் பாடசாலைகளுக்கும் விடு முறை வழங்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள் ளது.

இதனையடுத்து அனைத்துப் பாடசாலைகளும் வழமை போன்று எதிர்வரும் 23ஆம் திகதி மீண் 15

## இலங்கையில் தொடரும் துஷ்பிரயோகங்கள்

### ஐ.நாவில் மனித உரிமைகள் ஆணையாளர்



(ஜெனிவா)

இலங்கையில் பொலிஸ் மற்றும் பாது காப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப் படுகின்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பில் ஐ.நா அமர்வில் மனித உரிமைகள் ஆணையாளர் கவலை வெளியிட்டுள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சை. மோதியதில் பெண் உயிரிழப்பு

### பருத்தித்துறையில் சம்பவம்

(கரணவாய்)

வீதியைக் கடக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயங்களுக்குள்ளான குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தும்பளை மேற்கு பருத்தித்துறையைச் சேர்ந்த பிறேமளா கேசவதாஸ் (வயது- 56) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே உயிரி 15

## பொறுப்புக்கூறல் இலங்கையில் இல்லை

### ஐரோப்பிய ஒன்றியம் கவலை

(கொழும்பு)

இலங்கையில் போதியளவு பொறுப்புக்கூறல் இன்மை குறித்து தொடர்ந்தும் கரிசனை கொண் டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த சில வருடங்களாக இலங்கை நெருக் கடிகளை எதிர்கொண்டுள்ளதை ஏற்றுக் கொள்வதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரி 15

### வடக்கின் தேர்தல் நிலைவரம்

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர்

### ஆளுநருடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் அவர்களை ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் 15

## மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகார வரம்பை மீறுகிறது

### இலங்கை குற்றச்சாட்டு




(ஜெனிவா)

இலங்கை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழு அதற்குள்ள அதிகார வரம்பை மீறியிருப்பதாக இலங்கை குற்றம் சுமத்தியுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் 57ஆம் 15

## வலம்புரி பத்திரிகை அலுவலகம் அருமையும் அழகும் உடையது


(யாழ்ப்பாணம்)

வலம்புரி பத்திரிகையின் அலுவலகம் பழைமையும் அருமையும் அழகும் கொண்டமைந்துள்ளதென ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் புகழாரம் சூட்டியுள்ளனர்.

தேர்தல் கண்காணிப்புத் தொடர்பில் கலந்துரையாடும் பொருட்டு வலம்புரி அலுவல கத்துக்கு நேற்று முன்தினம் (08) விஜயம் செய்த ஐரோப் பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவினரே மேற்கண்டவாறு வலம்புரி அலுவலகத்தின் அழகைப் புகழ்ந் துரைத்துள்ளனர். 15

### அல்லைப்பிட்டியில்

## குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை



(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப் பட்ட நிலையில் நேற்று சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

இதில் அல்லைப்பிட்டி 3ஆம் 15

## இலங்கையில் சிவில் சமூகம் துன்புறுத்தல்

### ஜெனிவாவில் பிரிட்டன்

(ஜெனிவா)

இலங்கையில் சிவில் சமூ கம் கண்காணிக்கப்படுகின் றது, துன்புறுத்தப்படுகின்றது எனப் பிரிட்டன் தெரிவித்துள் ளது.

மனித உரிமை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



மண்ணில்
20 ✿ 12 ✿ 1951

விண்ணில்
07 ✿ 09 ✿ 2024

# சின்னத்தம்பி சரஸ்வதி (ராணி)

யாழ்ப்பாணம் தென்மராட்சி தாவளை இயற்றாலை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வடமராட்சி சித்தம்பாதி கரணவாய் தெற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சரஸ்வதி (ராணி) 07.09.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இலட்சுமி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மனைவியும் பத்மாவதி (கனடா), சிவசோதி (லண்டன்), சிவகுமார் (லண்டன்), சிவகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மெய்யழகன் (கனடா), ஞானரூபி (லண்டன்), கோகிலா (லண்டன்), சுஜேந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனகம்மா, செல்லம்மா, காலஞ்சென்றவர்களான நடராசா, சிவராசா மற்றும் இராஜேஸ்வரி (முத்து), பேபி (லண்டன்), கலாவதி (கலா), இந்திராணி (இந்திரா), தியாகராசா (பிரான்ஸ்), தவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் இராமலிங்கம், காலஞ்சென்ற சோமசுந்தரம், சாந்தம்மா, கலைஞானசுந்தரம், காலஞ்சென்ற அருளம்மா, காலஞ்சென்ற வல்லிபுரம், காலஞ்சென்ற கனகரட்ணம், அன்னலட்சுமி (கனடா), காலஞ்சென்ற சண்முகலிங்கம், காலஞ்சென்ற பஞ்சாட்சரம், காலஞ்சென்ற முத்துராசா, கலாமோகன், ஜெயந்தினி (ஜேர்மனி), பத்மலோசனி (பிரான்ஸ்), தீபா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் குகதர்சினி (கனடா), வினோத் (கனடா), சினேகா (லண்டன்), சியான் (லண்டன்), லஷனா (லண்டன்), சுலக்ஷனா (லண்டன்), கேதீஸ் (லண்டன்), கபிஷன் (கனடா), அக்ஷனா (கனடா) மற்றும் பார்த்தீபன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் மற்றும் சாயிஷா (கனடா), சயானா (கனடா) ஆகியோரின் செல்லப்பூட்டியும் மற்றும் சித்தம்பாதி செல்லையா யாகேஸ்வரி, ஜேர்மனி ராமச்சந்திரா அன்னலட்சுமி, சித்தம்பாதி நாகரட்ணம் சந்திராதேவி, உடுப்பிட்டி மகாதேவன் இராஜேஸ்வரி தம்பதிகளின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (11.09.2024) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பகல் 10 மணியளவில் கரணவாய் வெல்லன்கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சித்தம்பாதி
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

தகவல் - குடும்பத்தினர்
077 935 2865, 077 668 4953, 076 368 8312

(9151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாளைய சக்தி உங்கள் கையில்

## கனவை நிஜமாக்க சக்தி தேவை.

#WattAnIPO

ஒவ்வொரு இலங்கையரினதும் மின் வலுசக்தி துணையாளர் நாமாவோம்.
நாட்டில் நீங்கள் எங்கிருந்து, உங்கள் மின்குமிழை, மின்விசிறியை,
கணினியை ஒளிரச் செய்தாலும் உங்களுக்கான வலுவை நாம் வழங்குவோம்.

40 வருடகாலமாக ஒட்டுமொத்த இலங்கையர்களது கனவுகளுக்கு வலுவூட்டி
ஒளியூட்டினோம், இனி உங்கள் கனவு எதுவானாலும் நாம் அதற்கு ஒளியூட்டுவோம்.

QR குறியீட்டை ஸ்கேன் செய்து
அல்லது www.ltl.lk/ipo ஊடாக
தகவல் தொகுப்பை (Prospectus) பதிவிறக்கம் செய்து
மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

பொது வழங்கலுக்கான கூட்டு மேலாளர்கள்

NDB Investment Bank

CT CLSA Commitment. Trust. Continuity

LTL HOLDINGS LIMITED

(சி-2418)

**இலங்கையின் மாபெரும் ஆரம்பப் பொது வழங்கல் (IPO) - 2024 செப்டம்பர் 13 ஆரம்பம்**

2024 ஆகஸ்ட் 29, என திகதியிடப்பட்ட விடயத் தொகுப்பில் மேலதிக சேர்க்கைகளை இணைத்தமையின் காரணமாகவும் மற்றும் பொதுமக்களுக்கு போதுமான தகவல்களை வழங்குவதற்கு வசதியாகவும் 2024 செப்டம்பர் 10ம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்ட பொது வழங்கலுக்கான ஆரம்பத் திகதியானது, 2024 செப்டம்பர் 13ம் திகதி என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெல்க தமிழ்

சங்கு எங்கள் சின்னம்

எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
**கட்சிகளைக் கடந்து**
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!





எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
வாக்குகள்தான்.
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்.

(C-013)

தமிழ்ப் பொது வேட்பாளர்

**பா.அரியநேத்திரன்**

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு


## சமநிலையில் முடிவுற்ற வீரர்களின் போர்



வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் மகாஜனா - ஸ்கந்தா மோதும் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக பார்வையாளருக்கு பெரும் விருந்தாக அமைந்து சமநிலையில் நிறைவுபெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் 185 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மகாஜனா 6 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்ட நேரம் நிறைவுபெற வெற்றி - தோல்வி இன்றி சமநிலையில் முடிவுற்றது 22 ஆவது வீரர்களின் போர்.

நேற்று முன்தினம் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகாஜனா அணித் தலைவர் களத்தடுப்பை தேர்வு செய்ய ஸ்கந்தா முதலில் துடுப்பெடுத்தாடியது. முதலாவது இனிங்ஸில் ஸ்கந்தா அனைத்து இலக்குகளையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து முதலாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய மகாஜனா அனைத்து இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. 34 ஓட்டங்கள் முன்னிலையோடு இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா 9 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களை பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்தி, இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாட மகாஜனாவை அழைத்தது.

மகாஜனாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்து போட்டியை விறுவிறுப்பாக்கினார்கள். எனினும் அவர்களது ஆட்டமிழப்புக்களைத் தொடர்ந்து போட்டி சீரான வேகத்தில் நகர்ந்து பின்னர் மகாஜனா வெற்றியை நோக்கி துடுப்பாட்டத்தை வேகமாக்கியது. எனினும் விக்கெட்டுக்கள் சீரான வேகத்தில் வீழ்த்தப்படவும் ஆட்ட நேரம் நிறைவு பெறவும் பார்வையாளருக்கு நல்ல விருந்தோடு போட்டி வெற்றி- தோல்வி இன்றி சமநிலையானது.

ஆட்டநாயகனாக பந்துவீச்சில் முதலாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி, துடுப்பாட்டத்தில் முதலாவது இனிங்ஸில் 19 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 15 ஓட்டங்களையும் பெற்று சகல துறைகளிலும் பிரகாசித்த மகாஜனக் கல்லூரியின் சகலதுறை வீரன் உ.ஜோவெல் றொசான் தெரிவானார்.

இவர் சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் ஆகிய விருதுக்கான விருதுகளையும் பெற்றுக்கொண்டார். சிறந்த துடுப்பாட்ட வீரனாக முதலாவது இனிங்ஸில் 39 ஓட்டங்களையும் இரண் டாவது இனிங்ஸில் 42 ஓட்டங்களையும் பெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கே.டிலக்சனும் சிறந்த களத்தடுப்பாளராக அதே கல்லூரியின் எஸ். கேதுசனும் தெரிவானார்கள்.(நி-105-90)

## இலங்கையில்...

மனித உரிமைகள் பேரவையின் 57 ஆம் அமர்வு நேற்று ஜெனீவாவில் ஆரம்பமானது.

இதன்போது இலங்கை தொடர்பான தமது வாய்மூல அறிக்கையை முன்வைத்து உரையாற்றிய மனித உரிமைகள் ஆணையாளர் வொல்கர் டர்க், கடந்த காலங்களிலிருந்து இலங்கை விடுபட்டு புதிய நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இலங்கையில் நிலவுகின்ற சூழ்நிலைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச சமூகத்தின் அவதானம் தொடர்ந்தும் தேவைப்படுகிறது. தற்போது ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை இலங்கை எதிர்நோக்கியுள்ளது.

புதிய அரசாங்கம் ஒன்று ஆட்சியமைக்குமாக இருந்தால், நாட்டின் பொறுப்புக்கூறல், நீதி மற்றும் மறுசீரமைப்பு நோக்கிய மாறுதல்களுக்கான நிலையான நடவடிக்கைகளை அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரும் மக்களின் கருத்து, ஒழுங்கமைதல் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் போன்ற உரிமைகளை உறுதி செய்ய அதிகாரத்திலிருப்பவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையின் நிலைமாறு நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அனைத்து மனித உரிமைகள், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் போன்றவற்றுக்கு மதிப்பளித்து, இலங்கையின் கடன் வழங்குநர்கள் இலங்கைக்கான நிதி இடைவெளியை வழங்க வேண்டியது மிக முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


## மரண அறிவித்தல்



தோற்றம் 1964 - 01 - 09

மறைவு 2024 - 09 - 08

### திரு. துரைராசா வாசுதேவன்

N.C.C Road, புதுவளவு, நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.துரைராசா வாசுதேவன் கடந்த 2024.09.08 ஞாயிற்றுக்கிழமை தனது 60ஆவது அகவையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு.பொன்னையா துரைராசா - காலஞ்சென்ற திருமதி லீலாவதி தம்பதியினரின் ஏகபுதல்வனும் தயாநிதியின் அன்புக் கணவரும் ஐங்கரன்(பொறியியலாளர் - லண்டன்), விதுசன்(மருத்துவபீட மாணவன் - லண்டன்), நிகிதன்(உயர்தர வகுப்பு மாணவன் - லண்டன்) ஆகியோரின் தகப்பனாரும் வாசுகி நித்தியானந்தன்(ஆசிரியர் - யா/ விக்கினேஸ்வரா ஆரம்பப் பாடசாலை), காலஞ்சென்ற செல்வி.து.ரோகினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரு.கந்தசாமி நித்தியானந்தன்(ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் மைத்துனரும் செல்வி.சாமந்தி நித்தியானந்தன்(சித்த மருத்துவ உள்ளகப் பயிற்சி மாணவி - கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை) அவர்களின் மாமனாரும் திருமதி செல்வச்சோதி - பாலசிங்கம்(ஓய்வுநிலை ஆசிரியர்), உருத்திராவதி - சிவநாதன் ஆகியோரின் பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி - வாசுகி - நித்தியானந்தன்
சகோதரி ([illegible])
திரு.கந்தசாமி - நித்தியானந்தன்
மைத்துனர் ([illegible])

நெல்லியடி. (C-1154)



## விற்பனைக்கு

யாழ். பலாலி வீதியில் பல்கலைக்கழகச் சந்திக்கு அண்மையில் 2 ½ பரப்புக் காணியும் யாழ். கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 2 பரப்பு 4 குழிக் காணியும் யாழ். K.K.S வீதியில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும் மாடிக் கட்டடமும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 723 2535



## கண்ணீர் அஞ்சலி



### அமரர் கனகசபாபதி நமநாதன்

(பரமேஸ்வரா வித்தியாலய போசகர்)

மண்ணில் 1938.06.28 விண்ணில் 2024.09.08

பார் போற்றும் பண்பாளரே, கனக நமநாதனே!
எம் பாடசாலையில் உம் கால்தடம்
இனி இனிதே பதியாதோ!
பரமேஸ்வராக் கல்லூரி பெற்றெடுத்த
பெருமகனே! நீர் ஆற்றிய சேவைகள்,
பரமேஸ்வரா வித்தியாலயம் இருக்கும்
வரை எம் நினைவில் இருக்கும்
உம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.


பரமேஸ்வரா வித்தியாலயம் - திருநெல்வேலி, பாடசாலை சமூகம்

(1859)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வடமராட்சி அல்வாய் வடக்கு அருள்மிகு குருக்கட்டு அரசடி விநாயகர் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக நடைபெற்றது.


Airport & Aviation Services (Sri Lanka) (Private) Limited

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**வீடுகள் /கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் பதவியணியினருக்காக வதிவிட வசதிகளை வழங்கும்பொருட்டு வாடகை அடிப்படையில் பொருத்தமான வீடுகள் / கட்டிடங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியின் மூலம் முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.

உரிய வீடுகள்/ கட்டிடங்கள் மிகவும் சிறந்த நிலையில் இருப்பது அசியம் என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாடுகள் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

01. யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு அண்மையில் மற்றும் யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு எளிதாக அணுக முடியுமாக இருக்க வேண்டும். பாலாலி / காங்கேசந்துறை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. வரவேற்பறை/ உணவறை/ படுக்கையறைகள் (குளிரூட்டப்பட்ட அறைகள் விரும்பப்படுகின்றன) இணைக்கப்பட்டுள்ள குளியலறை அல்லது பொதுவான குளியலறைகள் மற்றும் சமையலறை.
03. அனைத்து விதமான வீட்டுத் தளபாடங்கள், வீட்டு உபகரணங்கள், மின்சார உபகரணங்கள் மற்றும் சமயலறை உபகரணங்களுடன் இருத்தல் வேண்டும்.
04. போதுமானளவு வாகனங்களை நிறுத்தும் வசதிகள்.
05. தொடர்வாரியான நீர்/ மின்சார விநியோகம்.
06. அனைத்து விதமான பராமரிப்பு நடவடிக்கைகளையும் உரிமையாளரே மேற்கொள்ள வேண்டும்.
07. வீட்டின் வெளிப்புறத்தை சுத்தம் செய்வது உரிமையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் குப்பைகளை அகற்றுவதற்காக பொருத்தமான அணுகுமுறையொன்றினை ஏற்படுத்தி பராமரிக்கப்பட வேண்டும்.

வீடுகள்/கட்டிடங்கள் முதலாவதாக ஒரு வருட காலத்துக்காக வாடகை அடிப்படையில் எழுத்துமூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் கம்பனியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் அக்காலத்தினை நீடித்துக் கொள்ள முடியும்.

கீழே தரப்பட்டுள்ள காரணங்கள் முன்மொழிவில் உள்ளடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

01. வீடுகள் / கட்டிடங்கள் தொடர்பான முழு விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1) | பெயர் (வீட்டின்/ கட்டிடத்தின் உரிமையாளர்) | 9) | படுக்கையறைகளின் எண்ணிக்கை (குளிரூட்டம் செய்யப்பட்ட/ குளிரூட்டம் செய்யப்படாத) |
| 2) | வீட்டு/ கட்டிடத்தின் முகவரி | 10) | குளியலறைகள்/ கழிப்பறைகளின் எண்ணிக்கை (பொதுவான/ இணைக்கப்பட்ட) |
| 3) | உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் | 11) | வரவேற்பறை (உண்டு/ இல்லை) |
| 4) | பிரதேச செயலகப் பிரிவு | 12) | சாப்பாட்டறை (உண்டு/ இல்லை) |
| 5) | கிராம சேவகர் பிரிவு | 13) | சமையலறை (உண்டு/ இல்லை) |
| 6) | யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ) | 14) | வாகன தரிப்பிட வசதிகள் (உண்டு/ இல்லை) |
| 7) | மாடிகளின் எண்ணிக்கை | 15) | உள்ள வீட்டுத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் |
| 8) | வீட்டின் உள்ளே பரப்பளவு (சதுரஅடி) | 16) | வேறு ஏதேனும் தொடர்புடைய விபரங்கள் |

02. வீட்டின்/கட்டிடத்தின் உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.
03. வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் காணியுறுதியின் பிரதி.
04. வீட்டின்/ கட்டிடத்தின் புகைப்படங்கள்.
05. எதிர்பார்க்கப்படும் மாத வாடகை. (வீட்டின்/ கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி தீர்மானிக்கும் உரிமை கம்பனியிடம் உள்ளது.)
06. எதிர்பார்க்கப்படும் முற்பணத் தொகை. (வீட்டின்/ கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி தீர்மானிக்கும் உரிமை கம்பனியிடம் உள்ளது.)

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுத்தாள் முத்திரை குறியிடப்பட்ட உறை ஒன்றில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் வாடகை அடிப்படையில் வீடுகள்/கட்டிடங்களை பெறுவதற்கான முன்மொழிவுகள் என குறிப்பிட்டு **தவிசாளர், திணைக்கள பெறுகை குழு இலக்கம் 02, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு,** வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள்(இலங்கை) (தனியார்) கம்பனி கட்டுநாயக்கவிற்கு 2024 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தவல்களைப் பெறுவதற்காக 011-2263550/ 011-2263513 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்)கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க.**


# நீங்கள் போடும் புள்ளடி எம் இனத்திற்கானது

## வவுனியாவில் தமிழ் பொதுவேட்பாளர்



(வவுனியா)

தென்பகுதி வேட்பாளர்களுக்கு அளிக்கும் வாக்கு எமது தலையில் மண் அள்ளிப்போடும் செயல் என தமிழ்ப் பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவித்த அவர், சஜித் பிரேமதாச ஆயிரம் பன்சாலைகளைக் கட்டுவதாக தெரிவித்து இருக்கின்றார். இந்த நிலையில் யாரோ ஒரு கட்சி கூறுகின்றது என்பதற்காக நீங்கள் அவருக்கு அளிக்கின்ற வாக்கானது பன்சாலைகளுக்கு வைக்கின்ற ஒவ்வொரு கல்லாக தான் இருக்கும்.

அதேபோல், ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீங்கள் அளிக்கின்ற வாக்கானது இருக்கின்ற நிலங்களை இன்னும் இழந்து செல்வதாகவே அமையும். ரணில் விக்கிரமசிங்கவே ஒரு கட்டமைப்பாக, ஒரு தேசமாக, ஒரு இனத்தின் விடுதலைக்காக இருந்த எம்மை சிதைத்த பெருமை அவரைத் தான் சாரும்.

அதே போல் அநுரகுமார திசாநாயக்க எமது இணைந்த வடக்கு கிழக்கை பிரித்தவராக இருக்கின்றார். இவ்வாறானவர்களை தென்பகுதியில் இருந்து அழைத்து வந்து மாலை போட்டு பொன்னாடை போர்த்தி வரவேற்கின்ற ஒரு வெட்கம் கெட்ட சமூகமாக நாம் மாறி வருகின்றோம்.

ஆகவே இந்த பொதுக் கட்டமைப்பு ஊடாக ஒரு செய்தியை சொல்வதற்காகவே நான் வந்திருக்கின்றேனே தவிர, ஒரு ஜனாதிபதியாக வருவதற்கு அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அந்த கதிரையை தட்டி பறிப்பதற்காகவும் இல்லை.

ஈழ மண்ணில் இழந்த உரிமைகளை மீட்பதற்காகவும் நாங்கள் நாங்களாகவே இருக்கின்றோம் என்பதை சர்வதேசத்திற்கும் இந்தியாவிற்கும் தென் இலங்கைக்கும் ஏன் ஒன்பதாவது ஜனாதிபதியாக வர இருக்கின்றவருக்கும் அந்தத் தகவலை நாங்கள் கொடுக்க இருக்கின்றோம்.

எங்களுடைய வடக்குக் கிழக்கில் ஒரு இனமாக ஒரு தேசமாக ஒன்றிணைந்த கட்டமைப்புக்குள் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை பெறுவதற்காக எங்களுடைய இனம் ஒன்றிணைந்து தனது ஆதரவை தெரிவிக்கின்றது என்கின்ற ஒரு செய்தியை நாங்கள் அவர்களுக்கு சொல்லி இருக்கின்றோம். ஆகவே, நீங்களும் போடுகின்ற புள்ளடியானது எமது இனத்திற்கான புள்ளடி என்பதை உணர்ந்து செயற்படுங்கள் எனத் தெரிவித்தார். (நி-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ சங்கத்தினால் நடத்தப்படும் 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகளை கௌரவித்தலும் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த பணியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வலி.கிழக்கு ப.நோ.கூ. சங்க தலைமைக் காரியாலய மண்டபத்தில் நீர்வேலி வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ சங்கத் தலைவர் ப.இராசேந்திரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.


இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான ந.திருலிங்கநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். கூ.அ.உ ஆணையாளர் இ.சந்திரசேகரன், கௌரவ விருந்தினர்களாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.விஜயமோகனராசா, யாழ். நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் திருமதி.சாந்தினி வாகீசன், சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.தயாளன், ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர் த.குணநாதன் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.பிறேமிலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)



துன்னாலை வடக்கு சகசகாய மாதா ஆலய வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் ஆலய சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து மாதா சொருபம் வீதி உலா கொண்டு வரப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (படம்: மகாலிங்கம்)

# மிருசுவில் பகுதியில் வாள்களுடன் அறுவர் கைது



(சாவகச்சேரி)

காடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் இரண்டு கூரிய வாள்களுடன் ஆறு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மிருசுவில் பகுதியில் இளைஞர் குழுவொன்று வாள்களுடன் நடமாடுவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இது தொடர்பாக கொடிகாமப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-30)

## பன்முகநோக்கில் பாரதி

(யாழ்ப்பாணம்)

பாரதியாரின் நினைவு நாளை முன்னிட்டு லிங்காஸ் வரகீதம் வழங்கும் "பன்முக நோக்கில் பாரதி" எனும் நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு வல்லை விக்நேஸ்வரா திருமண மண்டபத்தில் லிங்காஸ்வரகீதம் இயக்குநர் செல்வி.ஷாஜிதா அட் ஜெயலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் கணிதப் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா கலந்து கொள்வதுடன் கௌரவ அதிதியாக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீசாய் முரளியும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)


## மஹாயக்ஞும்

(யாழ்ப்பாணம்)

காயத்திரி மஹாமந்திர மஹாயக்ஞும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை யாழ்.சங்கிலியன் வீதி நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நடைபெறும்.

குறித்த யக்ஞத்தை நடத்துவதற்காக பிரசாந்தி நிலைய புட்டபர்த்தியிலிருந்து வேத விற்பன்னர் ஸ்ரீ வேதநாராயணன் இலங்கை வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மரண அறிவித்தல்



தோற்றம் 13 - 12 - 1948

மறைவு 09 - 09 - 2024

## ஆழ்வாப்பிள்ளை சோமசுந்தரமூர்த்தி

(முன்னாள் அதிபர் கிளி/முரசுமோட்டை அ.த.க பாடசாலை)


பெல்லாவத்தை, புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை சோமசுந்தரமூர்த்தி 09.09.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரநாதன்-உமையாத்தை தம்பதியினரின் மருமகனும் செல்வநாயகியின் பாசமிகு கணவரும், கிருபாகரன் (லண்டன்), மதிவதனன் (லண்டன்), நற்குணதர்சிகா, ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாகரன் மதுராவின் (லண்டன்) மாமனாரும், கேசன், கேசினி ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்றவர்களான அம்பிகாவதி, பாலசுந்தரி, சரஸ்வதி, சிவபாக்கியம், நடராஜமூர்த்தி, விக்னேஸ்வரமூர்த்தி, தியாகராஜமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமசாமி (பிரான்ஸ்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று 10.09.2024 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

பொல்லாவத்தை,
புலோலி தெற்கு, புலோலி. (c-1148) [illegible]

# மரண அறிவித்தல்



தோற்றம் 28 - 06 - 1938

மறைவு 08 - 09 - 2024

## கனகசபாபதி நமநாதன்

(முன்னாள் காணி குடியேற்ற அதிகாரி, பிரபல சட்டத்தரணி)

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி நமநாதன் (முன்னாள் காணி குடியேற்ற அதிகாரியும் பிரபல சட்டத்தரணியும்) அவர்கள் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு புதல்வரும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புஸ்பதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கார்த்திகேசு (Canada), காசிநாதன் (Colombo - சாஜி சங்கீதா), லீதெய்வநாயகி (London), செல்வராணி (Switzerland), ஜெயராணி (Hatton) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பரமயோகம், சகுந்தலாதேவி காலஞ்சென்றவர்களான Dr.குலசேகரம், விநாயகேந்திரன் மற்றும் Dr.ராஜரட்ணம், காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தன், யமுனாதேவி மற்றும் சிறிதேவி, நித்தியானந்தன், சிவானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 10.09.2024 இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினார்க்ள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible] (985)

தகவல் :
காசிநாதன் 077 613 6124 (கொழும்பு)
ஜெயராணி 071 828 6613 (ஹட்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்திற்கு ஆதரவு; தீர்மானத்தில் ஐயமில்லை

## சுமந்திரன் எம்.பி பதிவு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு கட்சி மேற்கொண்ட தீர்மானத்தில் எவ்வித ஐயமும் இல்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.


இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தமது எக்ஸ் தளத்தில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கான மீளப்பெறமுடியாத தீர்மானத்தை கடந்த 1ஆம் திகதி மேற்கொண்ட தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக அதனை வவுனியாவில் வைத்து அறிவித்தது.

இதுவே கட்சியும் அதன் அனைத்து உறுப்பினர்களும் கொண்டுள்ள நிலைப்பாடாகும். இந்த விடயத்தில் எவ்விதமான குழப்பங்களும் இல்லை என்று எம்.ஏ.சுமந்திரன் அறிவித்துள்ளார். (நி)

# கிணற்றுக்குள் விழுந்த யானை மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு செம்மலை புளிய முனை பகுதியில் காட்டு யானையொன்று பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் விழுந்துள்ளது.



இதனை அவதானித்த விவசாயிகள், பொலிஸார் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைத் தந்திருந்த அதிகாரிகள் யானையை மீட்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

மிக நீண்ட நேர போராட்டத்திற்கு பின்னர் குறித்த காட்டு யானையானது, வெளியில் எடுக்கப்பட்டு காட்டிற்குள் அனுப்பி விடப்பட்டுள்ளது. (நி)

# யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர், யாழ்ப்பாணம்

# நிறுவுநர் தின சிறப்பிதழ்-2024 செப்டெம்பர்-10



## உயர்திரு.மழவராயர் கந்தையா ஸ்தாபகர்

தந்தை:- சிற்றம்பலம் மணியகாரன் மழவராயர்
தாய்:- சின்னையா - சின்னத்தங்கச்சிப்பிள்ளை
தோற்றம்:- 10.09.1887 (விபவ ஆண்டு ஆவணி மாதம் 25 ஆம் நாள் ரோகிணி நட்சத்திரம்)
மறைவு :- 15.05.1936 (வைகாசி மாதம் பூர்வபக்ஷ பஞ்சமி)
அத்திபார தினம்:- தைமாத அத்த நட்சத்திரம்
வித்தியாரம்பதினம்:- வைகாசி மிருகசீரிட நட்சத்திரம்

## வள்ளலாரின் பணிகள்:

- விசாலாட்சி சமேத விசுவநாத பெருமானுக்கான ஆலயம் (புத்தூர் சிவன்) அமைத்தமை.
- புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியை அமைத்து இலவசக் கல்வி போதனையை மேற்கொண்டமை.
- ஏழைகளின் பசிப்பிணி தீர்க்க அன்ன சத்திரம் அமைத்தமை.
- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைக்க கதிர் வேலாயுத சுவாமி மடாலயத்துடன் கூடிய நிலத்தை நல்லூரில் வழங்கியமை.
- உலக நன்மை கருதி தர்மசாதனத்திற்காகத் தனது கோடிக் கணக்கான சொத்தை வழங்கியமை

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்.ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி அமையப் பெற்றுள்ள யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையிலும் இக்கல்லூரியின் நிறுவுநர் உயர் திரு.மழவராயர் கந்தையா அவர்களினால் இக்கல்லூரியின் மேம்பாடு கருதி உருவாக்கப்பட்டதுமான சோமாஸ்கந்த கல்லூரியின் தர்மகர்த்தா சபையின் தலைவர் என்ற வகையிலும் இக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசில் தினமும் சிறப்படைய வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1931 ஆம் ஆண்டு திரு.மழவராயர் கந்தையா அவர்களால் ஏழை மக்களின் கல்வியை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட இக் கல்லூரி அக் காலத்திலேயே அவரால் இலவசக்கல்விச் சிந்தனையை முன்னிறுத்திச் செயற்படுத்தப்பட்ட ஒரு பாடசாலையாகும். தானத்தில் சிறந்த தானமான வித்தியாதானத்தை இடையறாது வழங்கும் பொருட்டு ஏராளமான சொத்துக்கள். அவற்றின் வருமானங்களையும் கல்விப் பணிக்காக பயன்படுத்தும்படி ஏற்பாடு செய்ததோடு அதனை செவ்வனே நிர்வகிக்கும் பொருட்டு ஒரு தர்மகர்த்தா சபையினையும் நிறுவி பெரும் சமூகப் பணியாற்றிய செம்மலாவார். இன்று இப்பாடசாலையின் பௌதீக, மனித வள அபிவிருத்திக்கு இச்சபையின் நிதி பல வழிகளிலும் பேருதவி புரிகின்றது. இன்று இப்பாடசாலை பல சிறப்புக்களையும் சாதனைகளையும் தன்னகத்தே கொண்டு கோப்பாய் கோட்டத்தின் சகல வளங்களும் கொண்ட பாடசாலையாக திகழ்வது வள்ளலாரின் அறப்பணியின் சிறப்பேயாகும்.

மேலும் இப்பாடசாலை பல பல சாதனைகளைப் படைத்து சிகரம் தொடவும் இறைவனை வேண்டுவதோடு இன்றைய நன்நாளில் பரிசில்களைப் பெறுகின்ற மாணவச் செல்வங்களையும் அயராது உழைக்கின்ற பாடசாலை சமூகத்தினரையும் மனமுவந்து வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

**திருமதி.ஜமுனா ராஜசீலன், வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்,யாழ்ப்பாணம்.**

## பழைய மாணவர் சங்கத்தினரின் வாழ்த்துச் செய்தி

சைவத்தையும், தமிழையும் இரு கண்களாகப் போற்றி அறப்பணிகளை ஆற்றிய கொடை வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களின் 137 ஆவது ஜனன நாளாகிய இன்றைய நன்நாளில் பரிசில் தின நிகழ்வும், "சோமாஸ் கந்தன்" சஞ்சிகை வெளியீடும் நடைபெறுவது சாலச்சிறந்ததாகும்.

காலமறிந்து, தேசமறிந்து, சூழலறிந்து அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்கின்ற அதீத வேட்கையால் 1931 ஆம் ஆண்டு இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தி வித்தியா தானம் செய்யப் பெற்ற இக் கல்லூரியானது காத்திரமான கல்விப் பணிகளை ஆற்றி நூற்றாண்டை அண்மித்துக் கொண்டிருக்கிறது. உலகின் பல பாகங்களிலும் கல்லூரியின் புதல்வர்கள் சிறந்து விளங்குகின்றமை கல்லூரி அன்னையை பெருமைப்படுத்துவதாக அமைகிறது.

மென்மேலும் கல்லூரியானது பல்துறைகளிலும் சிறப்புற்று விளங்க வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்வடைகின்றோம்.

வாழ்க அமரர் நாமம்! வளர்க சோமாஸ்கந்த கல்லூரி!

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/ ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி புத்தூர்.**

## தர்மகர்த்தா சபையின் வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கல்வி பாரம்பரியத்தில் மையமாகத் திகழ்கின்ற புத்தூர் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரிக்கென தனித்த பாரம்பரியமும் நீண்ட வரலாறும் உண்டு. இத்தகைய பாரம்பரிய வரலாறானது வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களின் அறப்பணிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது எனலாம். வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள் ஆலயம், கல்விக் கூடம், அன்னசத்திரம் முதலான தர்மப்பணிகளைச் செய்ததோடு அவை சிறப்புற செயற்பட வேண்டும் என அசையும், அசையாச் சொத்துக்களையும் வழங்கி அவற்றை நிர்வகிப்பதற்காக தர்மகர்த்தாக்களையும் நியமித்திருந்தார்.

மழவராயர் கந்தையா அவர்களால் செயற்படுத்தப்பட்ட கல்விக் கூடமானது 92 ஆண்டுகளை கடந்து பல்லாயிரக்கணக்கான கல்விமான்களையும் உருவாக்கி பெரு விருட்சமாக வளர்ந்து நிற்கிறது. ஒரு நாட்டின் பெறுமதிமிக்க வளம் மாணவர்களே. இவர்கள் நனி சிறந்த கல்வியைப் பெற்று உயர்நிலையடைந்து மேலும் நாடு போற்றுகின்ற கல்வியாளர்களாகவும் நற்பிரஜை ஆகவும் மிளிரவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்க அமரர் நாமம்
வளர்க அவர் பணி

**தர்மகர்த்தா சபையினர்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.**

## வாழ்த்துச் செய்தி

வருடந்தோறும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறும் நிறுவுநர்தினமும் பரிசில் தினமும் நிகழ்விற்கு 2024 ஆம் ஆண்டும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சைவத்திற்கும் தமிழிற்கும் ஏற்பட்டிருந்த பின்னடைவுகளைக் கண்ணுற்ற வள்ளலார் மழவராயர் கந்தையா அவர்கள் புத்தூர் கிராமத்தில் வாழ்ந்த சிறார்களுக்காக இலவசக் கல்வியைப் புகட்டும் நல்ல நோக்கத்திற்காக ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரியை ஆரம்பித்து வைத்தார்.

அமரர். மழவராயர்-கந்தையா அவர்களின் எண்ணத்தில் உதித்த இந்தப் பாடசாலை எமது தமிழ்ச் சமூகத்திற்கு கல்வி, கலை, அறிவியல், ஆன்மீகம் என அத்தனை விடயங்களையும் புகட்டும் ஓர் அறிவுக் கூடமாகத் திகழ்வதையிட்டு அமரர் மழவராயர் கந்தையா அவர்களை எமது சமூகம் என்றென்றும் நன்றியுணர்வுடன் நினைவு கூர வேண்டும்.

கோப்பாய்க் கோட்டத்தில் க.பொ.த உயர்தரத்தில் அனைத்துப் பிரிவுகளையும் கொண்ட 1AB பாடசாலைகளில் முதன்மையான பாடசாலையாக விளங்கும் இப் பாடசாலை பல்வேறு சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டு பல தசாப்தங்களைக் கடந்து இன்றும் சிறந்த கல்விப் பணியாற்றிக் கொண்டிருப்பது பாராட்டதக்கது.

இன்றைய இந் நன்நாளில் கல்லூரித் தாயின் மடி தவழ்ந்து சாதனைகள் புரிந்து பரிசில்களைப் பெறுகின்ற அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் அக மகிழ்கின்றேன்.

**திரு.செ. ஜெயகாந்தன்(அதிபர்),**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை , புத்தூர்.**

## ஆசிச்செய்தி

அறிவுத்துறையும் ஆன்மீகமும் பெருங்கடலெனப் பெருகிச் சிறப்புற்று விளங்கும் புதுவை மண்ணில் செயற்கரிய செயலைச் செய்த பெருமகனார் அமரர் மழவராயர்-கந்தையா அவர்கள் இவ்வுலகை நீத்த தினம் இன்றாகும். புத்தூர் மண்ணிலே மும் மணிகளாய்த் திகழ்கின்ற புத்தூர் சிவன் தேவஸ்தானம், யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி அன்ன சத்திரம் என்பவற்றை நிறுவிச் சமூகத்திற்காய்த் தொண்டாற்றிய வள்ளல் அவர். சமூகத்தின் வயிற்றுப்பசியை நீக்கும் பொருட்டு அன்ன சத்திரத்தையும் அறிவுப் பசியைப் போக்குவதற்கு சோமாஸ்கந்த கல்லூரியையும் ஆன்மீகப் பசியைப் போக்குவதற்கு ஈடேற்றத்தை நல்குவதற்காக ஆலயத்தையும் உருவாக்கித் தந்திருப்பது அனைவருக்கும் அனுகூலம் அளிக்கும் செயலாகும்.

புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி சைவத்தமிழ்ப் பண்பாட்டுடன் இணைந்த வகையில் கல்விப் பணியை ஆற்றி வருகிறது. இங்கு கல்வி பயின்றவர்கள் பலரும் இன்று உயர்நிலைகளிலிருப்பது பெருமைக்குரிய விடயமாகும். பாரம்பரியப் பெருமைமிக்க இப்பாடசாலை பல சாதனைகளை நிகழ்த்தி எங்கள் வள்ளலாரின் கனவுகளை மெய்ப்பித்துக் கொண்டிருக்கும் இவ் வேளையில் நிறுவுநர் நினைவுதினமும் பரிசில் நாளையும் முன்னிட்டு வெளிவரும் இச் சிறப்பிதழுக்கு எனது ஆசிகளைத் தெரிவித்து நிற்கிறேன்.

**சிவஸ்ரீ.சாமி சோமசுந்தரக்குருக்கள்,**
**(விசாலாட்சி அம்பாள் சமேத**
**விஸ்வநாதப் பெருமான் தேவஸ்தானம்) புத்தூர்.**

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்/ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசில் தினமுமாகிய இந்நாளில் இக்கல்லூரியின் முதல்வர் என்ற வகையிலும் கல்லூரி அன்னை செதுக்கிய மாணவன் என்ற வகை யிலும்வாழ்த்துச்செய்தியை வழங்குவதில்பேருவகையடைகிறேன்.

செயற்கரிய செய்வார் பெரியார் எனும் வள்ளுவன் வாக்கிற்கு அமைய நின்றொழுகிய செம்மனச்செல்வர் அமரார் மழவராயர் கந்தையா அவர்கள் மனிதகுலம் அறிவுக்கண்கொண்டு துலங்குவதற்குக் கல்வியே அடிப்படை என்பதை உணர்ந்து புதுவைப் பதியில் உருவாக்கியதே எமது கல்லூரி. எமது வள்ளல் மழவராயர்-கந்தையா அவர்களது எண்ணத்தின் முகிழ்ப்பு இன்று வரை எமது பிரதேச மாணவர்களுக்குக் கல்விக்கனியை அள்ளி வழங்கி வான்புகழ் கொண்டு நிற்பது யாவருமறிந்ததே. எமது கல்லூரியின் மாணவச் செல்வங்கள் கல்வி, கலை, ஒழுக்கம், பண்பாடு, விளையாட்டு, மென்திறன்கள் என யாவற்றிலும் சிறந்து விளங்கிக் கல்லூரியின் புகழை அகிலமெங்கும் பரப்பவேண்டும் என நிறுவுநர் நினைவு நாளும், பரிசில் தினமுமாகிய இன்றைய நாளில் எல்லாம் வல்ல விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமானை வேண்டுகிறேன். இன்று எமது கல்லூரியானது வசதிமிக்க விஞ்ஞான ஆய்வு கூடம், தொழில்நுட்ப ஆய்வு கூடம், புத்தாக்க ஆய்வு கூடம், கணித ஆய்வு கூடம், தமிழ் மொழி வள ஆய்வுகூடம் எனும் வளங்களைப் பெற்றுக் கொண்டு முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகப் புகழாரம் சூடி நிற்கிறது. இத் தருணமதில் வள்ளலாரின் கீர்த்தியை உலகறியச் செய்யவும், இதய சுத்தியுடன் பணியாற்றவும் உறுதி பூணுவதோடு, பரிசில் பெறுகின்ற மாணவச் செல்வங்களுக்கும் எனது வாழ்த்துகளையும் ஆசிகளையும் கூறி நிற்கின்றேன்.

**திரு.சி.திரிகரன்,**
**அதிபர்,**
**யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,புத்தூர்.**

## கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

அமரர்.மழவராயர் கந்தையா அவர்களால் 1931 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது இன்று ஒரு 1AB பாடசாலையாகத் திகழ்கின்றது. பாடசாலையின் கல்வி அபிவிருத்தியை மையமாகக் கொண்டு மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவது இப்பாடசாலைக்கே உரித்தான சிறப்பம்சமாகும். இன்று இப்பாடசாலையில் 1207 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 20 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி உள்ளமை இப் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளது. வருடாந்தம் பல்கலைக் கழகம்.

தேசிய கல்வியியற்கல்லூரி மற்றும் பிற கற்கை நெறிகள் என்பவற்றிற்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது பாராட்டுக்குரியதாகும். இன்று அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரின் ஒன்றிணைவால் முன்மாதிரியான பாடசாலையாகத் திகழ்ந்து வருகின்றது. இக்கல்லூரியின் சாதனைப் பயணம் மென்மேலும் வளர எனது ஆசிகளையும் வாழ்த்துக் களையும் கூறி நிற்கின்றேன்.

**திரு. வி.சாரங்கன்,**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்(பதில்)**
**கோட்டக்கல்வி அலுவலகம், கோப்பாய்.**

(சி-1149)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் கொடூர விபத்து

• 48 பேர் உயிரிழப்பு • 50 பேர் வரை காயம்

(நைஜர்)

**நைஜீரியாவின், நைஜர் மாகாணம் அகெயி நகரில் நேற்றைய தினம் எரிபொருள் ஏற்றிச் சென்ற லொறி மீது பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து மோதி விபத்துக்குள்ளானதில் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.**



மேலும் குறித்த விபத்தில் 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)

## நாடு கடத்தப்படுவாரா ஹசீனா?



(இஸ்லாமாபாத்)

இந்தியாவில் இருந்து பங்களாதேஷிற்கு ஷேக் ஹசீனா விரைவில் நாடு கடத்தப்படுவார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பங்களாதேஷில் கடந்த ஜூலை முதல் ஓகஸ்ட் மாதம் வரை நடந்த மாணவர் போராட்டத்தால் பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா பாதுகாப்பு கேட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

இதனைத் தொடர்ந்து இனப்படுகொலை மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றச்சாட்டின் கீழ் ஹசீனா உட்பட 9 பேர் மீது பங்களாதேசின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் கடந்த மாதம் விசாரணையைத் தொடங்கியது.

தீர்ப்பாயத்தின் தலைமை சட்டத்தரணி தாஜுல் இஸ்லாம் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில் " தீர்ப்பாயம் மீண்டும் கூடும் போது. ஷேக் ஹசீனா உள்ளிட்டோருக்கு பிடியாணை பிறப்பிக்க வலியுறுத்துவோம். அதைத் தொடர்ந்து அவரை இந்தியாவிலிருந்து நாடு கடத்தி பங்களாதேஷிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி)

## மூளையை பாதிக்கும் வைரஸ் சீனாவில் கண்டுபிடிப்பு

(பீஜிங்)

NDTV-ஈரநில வைரஸ் (WELV) என அழைக்கப்படும் ஒரு புதிய வைரஸ் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் உண்ணி கடித்தால் மனிதர்களுக்கு பரவக் கூடியது எனவும், சில சந்தர்ப்பங்களில் நரம்பியல் நோய்களை ஏற்படுத்தக்கூடும் எனவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த வைரஸ் முதன்முதலில் ஜூன் 2019இல் ஜின்ஜோ நகரில் 61 வயது நோயாளியிடம் அடையாளம் காணப்பட்டதாகவும் மங்கோலியாவில் உட் பகுதியில் உள்ள ஈர நிலங்களில் உண்ணி கடித்த ஐந்து நாட்களுக்குப் பிறகு அவர் நோய்வாய்ப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

ஆரம்ப கண்டுபிடிப்பைத் தொடர்ந்து, ஆராய்ச்சியாளர்கள் வடக்கு சீனாவில் ஒரு முழுமையான ஆராய்ச்சியை மேற்கொண்டு அங்கு அவர்கள் பல்வேறு இடங்களில் இருந்து கிட்டத்தட்ட 14,600 உண்ணிகளை சேகரித்துள்ளனர்.

ஆடு, குதிரைகள், பன்றிகள் மற்றும் டிரான்ஸ்பைகல் ஜோகோர் எனப்படும் கொறித்துண்ணிகளிலும் WELV RNA கண்டறியப்பட்டுள்ளதாக ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. (நி)

## சிரியாவின் மத்திய பகுதியில் இஸ்ரேல் விமானத் தாக்குதல்- ஐவர் உயிரிழப்பு

(இஸ்ரேல்)

சிரியாவில் இஸ்ரேல் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 19 பேர் காயமடைந்துள்ளனர் என சிரிய அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

சிரியாவின் மத்திய பகுதியில் பல வெடிப்புச்சத்தங்களும், வான்பாதுகாப்பு பொறிமுறைகள் இயக்கப்படும் சத்தங்களும் கேட்டதாகவும் தெரிவித்துள்ளது.

வடமேற்கு லெபனான் பகுதியிலிருந்து மத்திய சிரியாவில் உள்ள இராணுவ இலக்குகள் இஸ்ரேல் வான்



தாக்குதலை மேற்கொண்டது என சிரியாவின் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சில ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. காயமடைந்தவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## பொலிவியாவை உலுக்கும் காட்டுத்தீ அவசர நிலை பிரகடனம்

(லாபாஸ்)

பொலிவியாவில் தற்போது 72 காட்டுத் தீ செயலிழந்து வருவதாகவும், இதனால் அழிவடைந்த காடுகளின் அளவு 3 மில்லியன் ஹெக்டேரைத் தாண்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பொலிவியாவில் கடந்த சில நாட்களாக கடுமையான காட்டுத் தீ பரவி வருகிறது. இதனால் தலைநகர் லாபாஸ் உட்பட பல நகரங்களில் காற்றின் தரம் குறைந்துள்ளது.

இதன்படி, தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நாட்டில் தேசிய அவசரகால நிலையை பிரகடனப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.


சாண்டா குரூஸ் நகரில்தான் அதிக எண்ணிக்கையிலான காட்டுத் தீ பதிவாகியுள்ளது.

தலைநகர் லாபாஸ் நகருக்கு அருகாமையில் காட்டுத் தீ பேரழிவு பதிவாகியுள்ளது. மேலும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் அதிக முயற்சி எடுக்கவேண்டியுள்ளது.

2010ஆம் ஆண்டுக்குப் பிறகு பொலிவியாவில் இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையிலான காட்டுத் தீ பதிவாகியுள்ளது. (நி)



## வெளியேறினார் வெனிசுலாவின் எதிர்கட்சித் தலைவர்



(வெனிசுலா)

வெனிசுலாவின் எதிர்க்கட்சித் தலைவர் எட்மண்டோ கோன்சாலஸ் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அந்த நாட்டு அரசாங்கம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில் குறித்த முடிவுகளை எதிர்க்கட்சி ஏற்க மறுத்ததையடுத்து எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் எட்மண்டோ கோன்சாலஸ் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில் தற்போது அவர் ஸ்பெயினிடம் அரசியல் தஞ்சம் கோரி நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்நாமை தாக்கியது 'யாகி'

- 14 பேர் பலி
- 176 பேர் காயம்
- 2.87 லட்சம் ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின
- விமான சேவைகள் ரத்து

(ஹனோய்)

**சீனாவைத் தொடர்ந்து வியட்நாமில் யாகி சூறாவளி புயல் தாக்கியதில் 14 பேர் பலியாகினர், 176 பேர் காயமடைந்தனர்.**



சீனாவின் ஹைனான் தீவு மற்றும் குவாங்டாங் மாகாணங்களை "யாகி" சூறாவளி புயல் புரட்டிப் போட்டது.

அதைத் தொடர்ந்து அண்டை நாடான வியட்நாமின் வடக்கே உள்ள குவாங் நின் மற்றும் ஹய் போங் மாகாணங்களுக்கு இடையே யாகி சூறாவளி புயல் நேற்றுமுன்தினம் கரையை கடந்தது. அப்போது மணிக்கு 149 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியதுடன் கன மழையும் பெய்தது.

இதன் காரணமாக ஏராளமான வீடுகள் சேதமடைந்தன. சாலையோரங்களில் இருந்த மரங்கள் வேரோடு சாய்ந்தன.

இதேபோல் பல்வேறு இடங்களில் மின் கம்பங்கள் சாய்ந்ததால் மின்சாரம் தடைப்பட்டது. இதுதவிர, 2.87 லட்சம் ஏக்கரில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் நீரில் மூழ்கின.

சூறாவளி புயல் எதிரொலியாக, அங்குள்ள நான்கு விமான நிலையங்களும் தற்காலிகமாக மூடப்பட்டதுடன் 100இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

இந்த புயலில் சிக்கி வியட்நாமில் மட்டும் 14 பேர் பலியாகினர், 176 பேர் காயமடைந்தனர்.

சூறாவளி புயலால் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் அந்நாட்டு ராணுவத்தினர் மற்றும் பொலிஸார் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே யாகி புயல் வலுவிழந்தாலும் வியட்நாமின் வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் கன மழை பெய்யும் என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி)

# 3 மாடி கட்டடம் இடிந்து விபத்து!

## எண்மர் உயிரிழப்பு



(டில்லி)

உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் , குடோனாக பயன்பட்டு வந்த 3 மாடி கட்டடம் இடிந்து விழுந்ததில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன் 28 பேர் காயமடைந்துள்ளனர்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் உயிரிழப்புகள் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடிந்து விழுந்த இந்த மூன்று மாடி கட்டடம் 4 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட நிலையில் இதில் மோட்டார் வாகனம் திருத்துமிடமாகவும், மருத்துகள் சேமிக்கும் குடோனாகவும் இயங்கி வந்துள்ளது.

இதேவேளை, கட்டட விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தேசிய மற்றும் மாநிலப் பேரிடர் மீட்பு படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இம்ரான்கானை விடுவிக்கக்கோரி பாகிஸ்தானில் பாரிய பேரணி

(இஸ்லாமாபாத்)

பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்காக தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை விடுதலை செய்யக் கோரி பாகிஸ்தான் தெக்ரிக்-இ-இன்சப் கட்சியினர் பேரணியொன்றை நடத்தியுள்ளனர்.

குறித்த பேரணியானது நேற்று முன்தினம் தலைநகர் இஸ்லாமாபாத்தின் சங்ஜனி மாட்டுச்சந்தை பகுதியில் நடைபெற்றுள்ளது.

இம்ரான்கான் மீது அரசின் இரகசியங்களை கசிய விட்டதாகவும், பிரதமர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து வன்முறையை தூண்டியதாகவும் தேர்தல் ஆணையகத்திற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகளில் இம்ரான்கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபி கைது செய்யப்பட்டு ராவல் பிண்டியில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இம்ரான்கானை விடுதலை செய்யக் கோரி அவரது கட்சி ஆதரவாளர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)



# ரஷ்யா-உக்ரைன் போரை நிறுத்த இந்தியாவால் முடியும்-இத்தாலி பிரதமர்

(வத்திக்கான்)

ரஷ்யா-உக்ரைன் போரை நிறுத்த இந்தியாவால் உதவ முடியும் என இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி தெரிவித்துள்ளார்.

இத்தாலிக்கு வருகை தந்த உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் மெலோனி பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் கூறியதாவது, "சர்வதேச சட்ட விதிகள் மீறப்பட்டால், குழப்பமும் நெருக்கடியும் உருவாகும்.

சர்வதேச சட்ட விதிகளை மீறுவது உலக மயமாக்கலுக்கு எதிரானது. இதன் காரணமாகவே, ரஷ்யா-உக்ரைன் இடையிலான மோதலை நிறுத்த இந்தியா, சீனா போன்ற நாடுகளால் உதவ முடியும் என்று நான் நினைக்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ரஷ்யா-உக்ரைன் இடையே 2 ஆண்டுகளுக்கும் மேலாக போர் நடந்து வருகின்ற நிலையில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் இராணுவ உதவி மற்றும் பொருளாதார உதவிகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வீடாக சென்று பிரசாரம் ஐவர் மட்டுமே பங்கேற்கலாம்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளுக்காக ஐந்து பேர் மாத்திரமே வீடுகளுக்கு செல்ல முடியும் என தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்க தெரி வித்துள் ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வீடுகளுக்கு பேரணியாகச் சென்று துண்டுப் பிரசு ரங்களை விநியோகிக்க சட்டம் இடமளிக்கவில்லை என்றும் ஐந்து பேருக்கு மேற்படாத குழு மாத்திரமே வீடுகளுக்குச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளுக்காக வாகனங்களில் ஸ்டிக்கர்கள் ஒட்டப்படுகின்றமை தொடர்பிலும் அவர் தகவல் வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான பயிர்ச்செய்கை காணிகள் 2024 ஆம் ஆண்டிற்கான காலபோக செய்கைக்கு மட்டும் குத்தகைக்கு விடப்பட உள்ளது

மேற்படி எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழும் புதுமுறிப்பு குளத்தின் கீழும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் பின்வரும் கமக்கார அமைப்புகளுக்குள் உள்ள எமது பயிர்ச்செய்கை காணிகள் 2024 ஆம் ஆண்டு காலபோக செய்கைக்கு மட்டும் எதிர்வரும் 14.09.2024 அன்று காலை 9.00 மணிக்கு சிறுவர் இல்ல பிரதான அலுவலகம் ஜெயந்தி நகரிலும் மதியம் 03 மணிக்கு கிளிநொச்சி பன்னங்கண்டி கிராம அலுவலர் அலுவலக அருகாமையிலும் பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கு முகாமைக்குழு தீர்மானித்திருப்பதால் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள விரும்பும் விவசாய பெருமக்களாகிய தாங்கள் ஏக்கர் ஒன்றிற்கு தங்களால் வழங்கக் கூடிய ஆகக் கூடிய தொகையினைக் கோரி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு :-** பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள தெரிவு செய்யப்படும் விவசாயிகள் கோரியுள்ள குத்தகைத் தொகையினை முழுமையாக முன்குத்தகையாக அன்றைய தினமே செலுத்தல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். அத்தோடு

ஏல விற்பனை தொடர்பில் எமது ஏல விற்பனைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாக இருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

**காணிகள் விபரம்**

| இல | காணி விபரம் | அளவு | ஏல விற்பனை நடைபெறும் இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| 01 | உருத்திரபுரம் 09 ஆம் கமக்கார அமைப்பின் கீழுள்ள வயல் | 04 ஏக்கர் | மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல பிரதான அலுவலகம் | காலை 09.00 AM |
| 02 | புதுமுறிப்பு சிவநகர் கமக்கார அமைப்பின் கீழுள்ள வயல் | 10 ஏக்கர் | | |
| 1 | திருவையாறு மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் நாகபூசணி வயல் | 20 ஏக்கர் | கிளிநொச்சி பன்னங்கண்டி கிராம அலுவலர் அலுவலகம் அருகாமை | பி.ப 03.00 PM |
| 2 | முரசுமோட்டை கமக்கார அமைப்பின் கீழ் முரசுமோட்டை வயல் | 26 ஏக்கர் | | |
| 3 | திருவையாறு மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் உலாந்த கமம் | 26 ஏக்கர் | | |
| 4 | திருவையாறு மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் உள்ள வயல் | 10 ஏக்கர் | | |

**தொடர்பு முகவரி :-**
**ச.மோகனபவன்**
**தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

**தொலைபேசி இலக்கம்**
**077 324 0950**
**021 492 3118**

(C-1150)

# பாக்கு விலை சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் பாக்கு விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் 35 ரூபாய்க்கு விற்கப்பட்ட பாக்கு தற்போது 40 ரூபா யாக உயர்ந் துள்ள தாக வியாபாரிகள் தெரி விக்கின்றனர்.

இந்நாட்களில் போதிய அளவு அறுவடை இல்லாததாலும், நாட்டில் கிடைக்கும் பாக்குகளை இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்வதாலும், விலை அதிகரித் துள்ளதாக கூறப்படுகின்றது.

இதன் காரணமாக ஒரு வெற்றிலைக்கு பயன் படுத்தும் பாக்கின் அளவை பாதியாக குறைக்க வேண் டிய நிலை ஏற்பட் டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். (நி)

# அனுமதிப்பத்திரமின்றி ஆடுகளை ஏற்றிச் சென்றவர் கைது

(தருமபுரம்)



தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் இருந்து 21 ஆடுகளை கூலர் வாகனத்தில் அடைத்துக் கொண்டு செல்லப்பட்ட குற்றச்சாட்டிலும் வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்கான கால்நடை வைத்தியரின் அனுமதிப்பத்திரம் இன்றி அநுராதபுரத்திற்கு கொண்டு செல்ல முற்பட்ட காரணத்தினாலும் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (நி316)

# இராசிபலன்

10. 09. 2024
ஆவணி25 , செவ்வாய்க்கிழமை,
சப்தமி முன்னிரவு 6.57மணிவரை

அனுசம் பிற்பகல் 5.05 மணிவரை
சுபநேரம் -10.33-12.03 மணிவரை
இராகுகாலம் -3.03-4.33 மணிவரை

சந்திராஷ்டமம்-
ரேவதி, அச்சுவினி

**வளவன்**

**மேஷம்** உடல் நலனில் அக்கறை தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள், கடவுளை வழிபட்டுக் காரியங்கள் தொடங்க வேண்டிய நாள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் நாள், மற்றவர்களின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**துலாம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், சேமிப்பு உயரும் வாய்ப்புண்டு.

**மகரம்** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்

**சிம்மம்** உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** முன்னேற்றம் பெற பெரிதும பாடுபடுவீர்கள், கௌரவம் மிக்கவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**கும்பம்** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கி கொள்ள முற்படுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கௌரவமான சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**கன்னி** எடுத்த காரியங்களை முடிக்க உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்தி தரும்

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, பயணத்தால் பிரபலமான ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**படிக்கும் பழக்கம் ஒரு முழுமையான மனிதனை உருவாக்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை சோழமண்டல குளம் தொல்லியல் துறையினரால் ஆய்வு

(மன்னார்)

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சோழ மண்டலகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடப் பெயர்களின் தன்மைக்கேற்ப சோழர்களாலும் அதற்கு முந்தைய காலத்தில் பண்டைய தமிழர்களாலும் ஆட்சி செய்யப்பட்டு வந்திருக்கலாம் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் அப்பகுதியின் சில முக்கியமான இடங்களில் தொல்லியல் தொடர்பான கள ஆய்வு பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.



மன்னார் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன் அவர்களின் ஒழுங்கமைப்பிலும் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் மா.ஸ்ரீஸ்கந்தகுமாரின் தலைமையிலும் மன்னார் சட்டத்தரணி செல்வராஜா டினேசனின் வழிநடத்தலிலும் இந்த கள ஆய்வானது நடைபெற்றது.

இந்த கள ஆய்வின் போது தமிழர்களின் வாழ்வியல் தொடர்பான பல விதமான சட்டி, பானை, ஓட்டுத்துண்டுகள் சேட் எனப்படும் கல் இரும்புத்தாது பெறக்கூடிய கற்கள் போன்ற பல சான்றுப் பொருட்கள் நிலத்தின் மேல் பகுதியில் மேலதிக ஆய்வுகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த தொல்லியல் கள ஆய்வில் முன்னாள் தொல்லியல் துறை விரிவுரையாளர் கந்தசாமி கிரிகரன், மன்னார் ஊடகவியலாளர் ஜெகன் மற்றும் இலுப்பைக்கடவை கிராமத்தைச் சார்ந்த பலரும் கலந்து கொண்டனர். (நி-285)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை 2040 லீற்றர் கோடா மீட்பு

(தருமபுரம்)

தருமபுரம் கல்லாறில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக் கமைய நேற்றைய தினம் மேற்படி கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் 2040 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டது.

சுற்றிவளைப்பின் போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் தப்பிச்சென்றுள்ளார். குறித்த நபரைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 250 | 250 | 250-300 | 250 |
| உருளைக்கிழங்கு | 160 | 190 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 200 | 200-250 | 300 |
| தக்காளி | 200 | 200 | 230 | 250 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 260 | 200 | 250-300 | 180 |
| கோவா | 230 | 300 | 250 | 250 | 300 |
| கரட் | 250 | 260 | 350 | 300 | 300 |
| பூசணி | 60 | 60 | 100 | 60 | 80 |
| புடோல் | 50 | 120 | 100 | 80 | 160 |
| வாழைக்காய் | 250 | 200 | 200 | 200-250 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250-300 | 150-200 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 300 | 350 | 300 | 300 | 300 |
| வெண்டைக்காய் | 60 | 80 | 100 | 70-100 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 150 | 120 | 150 | 100-130 | 200 |
| லீக்ஸ் | 300 | 320 | 320 | 300 | 300 |
| பீற்றூட் | 80 | 80 | 120 | 80 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 500 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 250 | 150-200 | 200. |
| போஞ்சி | 300 | 500 | 350 | 300 | 450 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | 250 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 150 | 140 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 300 | 300-350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 100-110 | 100-140 | 100-130 |
| இராசவள்ளி | -- | 800 | 650 | 600 | 800 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 | -- | 320 |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 80 | -- | 50 | 80 | 120 |

# ஐயனார்புரம் பகுதியில் பெரும் குளவிக்கூடு

## அச்சத்துடன் நடமாடும் மக்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக் குளம் ஐயனார்புரம் பகுதியில் பெரும் குளவிக் கூடு இருப்பதன் காரணமாக அப்பகுதியில் வாழ்கின்ற குடும்பங்கள் அச்சத்துடன் நடமாட வேண்டி உள்ளது.

இப்பகுதியில் 20 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன.

அத்துடன் முதியோர் இல்லம், பாடசாலை என்பன அப் பகுதியைச் சூழ் இருப்பதால் அக்குளவிக் கூட்டினை விரைந்து அகற்றுவதற்கு வனஜீவராசிகள் திணைக் களத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)

# கண்ணிவெடி அகற்றிய பகுதிகள் விரைவில் கையளிப்பு

(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் மற்றும் முகமாலை கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள 1,142,563 சதுரமீற்றர் பகுதியிலுள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதையடுத்து விரைவில் ஹலோ ட்ரஸ் நிறுவனத்தால் கையளிக்கப்படவுள்ளன.

இந்நிலையில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ள பகுதிகளை கடந்த புதன்கிழமை பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், ஹலோட்ரஸ் நிறுவன உத்தியோகத்தர்கள், இத்தாவில், முகமாலை கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், மீள்குடியேற்ற உத்தியோகத்தர், அரசசார்பற்ற நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரால் பார்வையிடப்பட்டது. (நி-315)

# காரைநகர் களபூமி கற்பக விநாயகர் இன்று மண்டலாபிஷேகம் பூர்த்தி-10.09.2024

கற்பக விநாயகர் 18 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் காலத்தில் நீதிமன்றத்தில் தவணைக் கொப்பியை நீக்கியவர் இன்று 20 ஆம் நூற்றாண்டில் கொழும்பு மாநகர் ஆவணிச்சதுர்த்தி அன்று வேள்வித் திருநீறும் தந்து அடியேனுக்கு மனதுக்கு மகிழ்ச்சியும் காணும் கண்களுக்கு ஆனந்தமும் திருவடி தரிசனமும் பேரருள் தந்தார் "ஓம் கணபதியே நம"

பக்திச் சுவை நனி சொட்டவும் திருமுறைகளையும் விநாயகர் அகவல் திருப்புகழையும் நாளும் ஓதி உய்வு பெற வேண்டுவது ஒவ்வொருவரது கடமை. ஆலயங்களிலும் இல்லங்களிலும் உள்ளங்களிலும் ஓதி ஒலிக்குமாறு செய்வது சிறந்த உயர்ந்த சிவப்பணியாகும்.

"ஐங்கரனைத் தெண்டனிட்டேன் அருளடையவேண்டுமென்று
தங்காமல் வந்து ஒருவன் தன் சொரூபம் காட்டி எனை
கொள்ளைப் பிறப்பு அறுக்கக் கொண்டான் குருவடிவம்
கள்ளப் புலன் அறுக்கக் காரணமாய் வந்தாண்டி!"

**திருநீறு தெய்வீகம்- திருமந்திரம்- 1666**

"கங்காளன் பூசும் கவத் திருநீற்றை.
மங்காமல் பூசி மகிழ்வரேயாம் ஆகில்.
தங்கா வினைகளும் சாரும் சிவகதி.
சிங்காரம் ஆன திருவடி சேர்வரே"

சிவன் பூசும் கவசத் திருநீற்றை அதன் ஒலியானது கெடாமல் நெற்றியில் பரவி சிவசிவ எனப் பூசி. நாம் ஒளி மங்காது. ஒரு தீவினையும் அடையாது. சிவப்பேறு அடைவார்.

**திருநீற்றின் பயன்- திருவருள் சேர்க்கும் திருமந்திரம்- 1667**

"அரசுட னாலத்தி யாகுமக் காரம்
விரவு கனலில் வியனுரு மாறி
நிரவிய நின்மலந்தான் பெற்றநீத
ருருவம் பிரம னுயர்குலமாமே"

அரச மரம். ஆலமரம். அத்தி மரம். என்பவற்றின் சமித்துகள் -சுள்ளிகள் வேள்வித்தீயில் பொருந்தி உருவம் மாறித் அருள்மிகு திருநீறாகும். இது அணிபவர்களை உருவமில்லாத உயர்பொருள் சிவனருளைப் பெற்று நீதி நெறி தவறாத இறைவன் தியானத்தால் உயர்குலத்தவர் ஆவார்.

**மாணிக்கவாசகர் திருவாசகம் -51-65**

"மண் அதனில் பிறந்து. எய்த்து. மாண்டு விழக் கடவேனை.
எண்ணம் இலா அன்பு அருளி. எனை ஆண்டிட்டு. என்னையும் தன்
சுண்ண வெண் நீறு அணிவித்து. தூ நெறியே சேரும்வண்ணம்.
அண்ணல் எனக்கு அருளிய ஆறு. ஆர் பெறுவார்? அச்சோவே!"

மண்ணுலகில் வினைவயத்தால் பிறந்து வினை ஊட்டத்தால் இளைத்து இறுதியில் இறந்து போகச் சுட வேணாகிய அடியேனை அளப்பரிய அன்பு காட்டி அருள் செய்து ஆட்கொண்டான் அம்மட்டோ. எனக்குத் தன் திரு வெண்ணீற்றினை அணிவித்து தூய பேரின்ப நெறியை அடையும் வண்ணம் அருளியுள்ளான். இதற்கு நற்பேற்றினை வேறு யாரே பெறவல்லார்.

கற்பக விநாயகர் ஆலயத்தில் 30.08.2024 அன்று அடியேன் வேள்வியில் திருவருள் சேர்க்கும் திருநீற்றை எடுக்கும் போது "தொடாதீர் எனத் தடுத்தது" ஓர் குரல். தடுத்ததும் "அதிர்ந்தேன்". மனவேதனையுடன் கைவிட்டேன்.இலங்கை. இந்தியா. பல ஆலயங்களில் கும்பாபிஷேகம் பார்த்து அங்கு வேள்வி நீறு எடுத்தேன். ஒருவித தடையும் இல்லை. இறைவன் அருளால் கொழும்பு மாநகர்செல்லும் வாய்ப்பால் 07.08.2024 விநாயகர் ஆவணிச் சதுர்த்தி தினத்தில் நான்கு ஆலயத்தில் விநாயகர் தரிசனமும் ஓர் ஆலயத்தில் தேர் திருவிழாவும் அங்கு ஓதுவார் நம்மை திருமுறை ஓதிவித்தும். காளாஞ்சியும் கிடைத்தது. அப்போது எம் களபூமி விநாயகரது அருள் எனது உள்ளத்தில் பொழிந்தது.

சாயந்தரம் ஆலயத்தில் பூசைகளும் பார்த்து. வேள்வி அக்கினி நீறாக்கி. பொன்னைப் பற்ற வைக்கப் பொற்கொல்லர் வைக்கும் பொடி போல. ஆன்மாக்களை இறைவனோடு ஒன்றச் செய்வது வேள்வித்தீயில் எரிந்து மாறிய திருநீறு. நமது பித்தளைப் பேளையில் எடுத்து நெற்றியில் மூன்று விரல்களாலும் பரவி அணிந்து பரவசப்பட்டு ஆனந்தக்கண்ணீர் சொட்டிய உள்ளத்தில் எமது குலதெய்வமாம் களபூமி கற்பக விநாயகரை உணர்ந்தேன். உடம்பில் பூசி ஆனந்தம் அடைந்தேன். கிடைக்கும் போது எல்லாமே திருநீறு அணிந்த பெருமையும் உணர்ந்தேன். அங்கு பாடியது திருஞானசம்பந்தரது [illegible] பேரின்பம் அடைந்தேன். இதுவும் களபூமி பெருமானின் திருவிளையாடலாகும். அன்று பகல் முழுவதும் 21 தடவையும் விநாயகர் ஓதியும் பின்னர் தொடர்ந்து ஓதினேன்.

**சிவ வாக்கிய சித்தர்- பாடல் தரிசனம்- 31**

"செய்யதெங்கில்லே இளநீர் சேர்ந்த காரணங்கள் போல்
ஐயன் வந்து என்னுளம் புகுந்து கோயில் கொண்டனன்
ஐயன் வந்து என்னுளம் புகுந்து கோயில் கொண்ட பின்
வையகத்தில் மாந்தர் முன்னம் வாய் திறப்பது இல்லையே"

பக்திக்கும் மரியாதைக்கும் ஆலயத்தில் நாமும். கோயில் தொண்டர்களும். நிர்வாகமும் பணிபுரியும் இடம் தான் ஆலயம் இதனை நாவுக்கரசர்

"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே"

இறைவன் இசை வடிவமாய் இருக்கிறார் என்பது முதுமொழி யாகும்.நாம் அருளார்கள் நமக்குத்தந்த திருமுறைகளை ஓதுவோம். உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன். வானுலகில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான்.

குலதெய்வம் கற்பக விநாயகர். ஈழத்துச்சிதம்பரம் கூத்தன். பூரணபுட்கலை ஐயனார் பேரருளையும். அடியேனுக்கு அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார் மாணிக்கவாசகர் மடலாயத்திற்கு "ஞானச்சுடர்" நிலையம் ஆகிய விருதுகளையும். தலா 1000 பொற்காசு முடிச்சும் தந்து அருள்மிகு மாணிக்கவாசகர் விக்கிரகம் மடாலயத்தில் பிரதிஷ்டை செய்து திருவாசகம் ஓதவும். விருதுகள் தந்த திருவாடுதுறை ஆதினம் சீர்வளர் சிவப்பிரகாச சுவாமிகளையும் உத்தரகோச மங்கை ஆலயத்தின் ஊரில் இருந்து வந்து பல சைவ வழிகாட்டி நூல்களைத் தந்த க.வைத்தீஸ் வரக்குருக்கள் அவர்களையும் திருவடிகளையும் மனம். மெய். வாக்கால் வணங்குவோம். இன்று மண்டலாபிஷேகம் தரிசிப்போம் கங்காளன் பூசும் கவசத்திருநிறு நெற்றியில் நாமும் பரவி அணிந்து ஒளி மங்காது. குறையாது பூசி எங்களது ஒரு தீவினையையும் அடையாமல் அருள்மிகு சிவப்பேறு பெறுவோம்.



**க.கு.க. சிவபாலன் போசகர், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 576





அந்த ஆசை அவர் ஆயுள் காலத்தில் நிறைவேறவில்லை. ஆயினும் சில பாடல்களைச் சேகரித்தார். தேவாரப் பதிகங்களின் முறையில் தாமும் சில பாடல்களைப் பாடினார். அவற்றில் சிதம்பரத்தைப் பற்றி அவர் பாடிய பதிகம் திருவிசைப்பா என்ற தொகுதியில் இன்றும் வழங்கி வருகிறது.

கண்டராதித்தர் தமது அரும் பெரும் தந்தையாகிய பராந்தக சக்கரவர்த்தி தில்லையம்பலத்துக்குப் பொன் வேய்ந்தது பற்றித் தாம் பாடிய பதிகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

“வெங்கோல் வேந்தன் தென்னன்நாடும்
ஈழமும் கொண்ட திறல்
செங்கோற்சோழன் கோழி வேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல்வளையார் பாடியாடும்
மணி தில்லையம்பலத்துள்
எங்கோல் ஈசன் எம்பிறையை என்று
கொல் எய்துவதே!”

என்ற பாடலில் தம் தந்தை பாண்டிய நாடும், ஈழமும் வென்றவர் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். பதிகத்தின் கடைசிப் பாடலில் தமது பெயரை அவர் குறித்திருப்பதுடன், தம்முடைய காலத்தில் சோழரின் தலைநகரம் தஞ்சையானதையும் குறிப்பிட்டிருக்கிறார்.

“சீரான்மல்கு தில்லைச் செம்பொன்னம்பலத்தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழி வேந்தன் தஞ்சையர்கோன் கலந்த
ஆராவின் சொல் கண்டராதித்தன் அருந் தமிழ் மாலை வல்லார்
பேராவுலகிற் பெருமையோடும் பேரின்பம் எய்துவரே!”

கண்டராதித்தருக்குப் போர் செய்து இராஜ்யத்தை விஸ்தரிப்பதில் நம்பிக்கை இருக்கவில்லை போர்களினால் மனிதர்கள் அடையும் துன்பங்களைக் கண்டு வருந்தியவரான படியால் கூடிய வரையில் சண்டைகளை விலக்க முயன்றார். சமாதானத்தையே நாடினார். இதன் காரணமாக இவர் ஆட்சிக் காலத்தில் சோழ சாம்ராஜ்யம் மிகச் சுருங்கலாயிற்று. கண்டராதித்தர் தம் முதிர்ந்த வயதில் மழவரையர் மகளை மணந்து கொண்டார். அவர்களுடைய புதல்வன் மதுராந்தகன், கண்டராதித்தரின் அந்திம காலத்தில் சின்னஞ் சிறு குழந்தை. இராஜ்யத்தைச் சுற்றிலும் எதிரிகள் தலையெடுத்துக் கொண்டிருந்தனர். அதே சமயத்தில் கண்டராதித்தரின் தம்பி அரிஞ்சயன் போரில் காயம் பட்டு மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். அரிஞ்சயனுடைய குமாரன் சுந்தர சோழன் அதற்குள் காளைப் பருவத்தைக் கடந்து, பல போர்களிலே வெற்றிமுரசு கொட்டி, மகா வீரன் என்று பெயர் பெற்றிருந்தான். ஆதலின் கண்டராதித்தர் தமக்குப் பின்னர் சுந்தரசோழனே பட்டத்துக்கு உரியவன் என்று முடிவுகட்டிக் குடிமக்களுக்கும் அறிவித்து விட்டார். தன்னால் சிம்மாசனம் சம்பந்தமான குடும்பச் சண்டைகள் உண்டாகாதிருக்கும் பொருட்டுச் சுந்தர சோழருடைய சந்ததிகளே பட்டத்துக்கு உரியவர்கள் என்றும் சொல்லி விட்டார்.

தமது குமாரன் மதுராந்தகனைச் சிவ பக்தனாக வளர்த்துச் சிவ கைங்கரியத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்று தம் மனைவியிடமும் அவர் சொல்லியிருந்தார். இவையெல்லாம் அந்நாளில் நாடறிந்த விடயங்களாயிருந்தன. செம்பியன் மாதேவி தன் கணவருக்கு அளித்த வாக்கை நிறைவேற்றி வந்தாள். மதுராந்தகனுடைய சிறு பிராயத்திலேயே அவன் உள்ளத்தில் சிவபக்தியையும் உலக வாழ்வில் வைராக்கியத்தையும் உண்டாக்கி வளர்த்து வந்தாள்.

ஏறக்குறைய இருபது பிராயம் வரையில் மதுராந்தகன் அன்னையின் வாக்கையே வேத வாக்காகக் கொண்டு நடந்து வந்தான். இராஜ்ய விவகாரங்களில் அவனுக்குச் சிறிதும் பற்று ஏற்படவில்லை. சோழ சிம்மாசனம் தனக்கு உரியது என்ற எண்ணமே அவன் உள்ளத்தில் உதயமாகாமல் இருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னால் சின்னப் பழுவேட்டரையரின் மகளை மணந்ததிலிருந்து அவன் மனம் மாறத் தொடங்கியது. (தொடரும்)



என்று கூறி தன் கையில் இருந்த வில்வப்பழத்தை யாக குண்டத்தில் போட்டான் அரசன்.

மறு நொடியில் தங்க வில்வப்பழம் ஒன்று தோன்றியது. அதைத் தொடர்ந்து அக்கினி தேவனும் தோன்றினான். உனக்கு என்ன வரம் வேண்டும்? என்று கேட்டான் அரசனிடம்.

அரசன் அக்கினி தேவனை வணங்கி, “இதோ நிற்கும் அந்தணன் நினைப்பது போல் கிடைக்க வேண்டும் என்பது தான் தாங்கள் அருள வேண்டிய வரம்” என்று அந்தணனுக்காகப் பரிந்து வேண்டினான் அரசன்.



## சிறுவர் அரங்கம்

## வெற்றி பெறுவது எப்படி?

அப்படியே ஆகக் கடவது. மேலும், நீயும் செழிப்போடு வாழ்வாயாக! உன் அரண்மனைக் கருவூலம் எப்பொழுதும் நிறைந்தே இருக்கும் என்று அரசனுக்கு (அந்தணனுக்கும் சேர்த்து) வரம் அருளினான்.

அதைக் கண்டு வியப்புற்ற அந்தணனுக்கு பொறாமையும் உருவெடுத்தது “அக்கினி தேவனே! நான் வெகுநேரமாகத் தவம் செய்து கொண்டிருந்தேன். எனக்குக் காட்சி அளிக்கவில்லை. அரசனுக்குச் சிறிது நேரத்திலேயே காட்சி அளித்தீரே! அது ஏன்?” என்று கேட்டான் அந்தணன்.

அந்தணனே! உலகில் வலிமைமிக்க ஆற்றலுக்கே விரைவில் வெற்றி கிட்டும். தவிர உன்னைப் போன்ற சுயநலம் கொண்ட மந்தபுத்தியுள்ள சோம்பேறிக்கு அவ்வாறு கிடைக்காது. மற்றும் கர்வமும், அலட்சியமும், பொறாமையும் உன்னிடம் குடிகொண்டு உள்ளது என்று கூறி அக்கினி தேவன் மறைந்து விட்டான்.

(அக்கினி தேவன் தோன்றுகிறாரோ இல்லையோ) வலிமைமிக்க ஆற்றல், உறுதியான, உள்ளம், சுயநல மின்மை, பிறருக்காக வேண்டுதல் இவை இந்தக் கதையில் சிறந்து விளங்குகின்றது (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான கண்ணோட்டம் மனதை திறந்து புதிய சாதனைகள் புரியும் புத்துணர்வை தருகிறது.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியலில் இருந்து மக்கள் அந்நியப்படுகின்றனர்

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் 11 நாட்கள் உள்ளன. இந்நிலையில் தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் எவ்வாறாக உள்ளன என்று பார்க்கின்ற வழமைபோய், ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதிகளின் நிலைப்பாடுகளும் எவ்வாறாக உள்ளன என்று ஆராய்கின்ற அளவுக்கு எங்கள் அரசியல் கீழ் நிலைப்பட்டுள்ளது.

பரவாயில்லை. நொந்து கெட்டுப் போயுள்ள நம் தமிழ் மக்களுக்கு அநியாயம் செய்வதற்கு யார் நினைத்தாலும் அந்தக் கர்மா சம்பந்தப்பட்டவர்களைச் சும்மா விடாது என்பதை இவ்விடத்தில் கூறிவைக்க விரும்புகின்றோம்.

இஃது ஒருபுறமிருக்க, தமிழ் அரசியல்வாதிகளில் சிலர் தமிழ் மக்களுக்கு எதுவும் தெரியாது என்று நினைப்பதுதான் மிகப்பெரிய அபத்தம்.

ஆம், தமிழ் அரசியல்வாதிகள் பற்றி, அவர்களிடையே நிலவுகின்ற ஒற்றுமையீனம் பற்றி தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் அறிய வேண்டும்.

நேரடியாகச் சென்று உண்மையை அறிவது கடினமாக இருக்குமென்பதால், மாறுவேடத்தில் அல்லது நம்பிக்கைக்குரிய நபர்களை அனுப்பி தமிழ் அரசியல்வாதிகள் பற்றி தமிழ் மக்கள் என்ன கதைக்கிறார்கள் என்று அறிவது கட்டாயமானது.

இவ்வாறு நாம் கூறுவதை தேவையற்ற வேலை என்று யாரும் நினைத்துவிடாதீர்கள். ஏனெனில் தமிழ் அரசியல் பரப்பில் இருந்து தமிழ் மக்கள் விலகிச் செல்கின்றனர்.

முன்பிருந்த அரசியல் விருப்புகள், ஆர்வங்கள் இப்போது தமிழ் மக்களிடம் இல்லை.

இவ்வாறான நிலைமை தமிழ் அரசியலை வெற்று வெறுதாக்கிவிடும்.

அதாவது அரசியல் என்பது மக்களுக்கானது. எனினும் துரதிர்ஷ்டவசமாக தமிழ் அரசியல்வாதிகள் அரசியலைத் தமக்கான சொத்தாகக் கருதுகிறார்கள். இதுதான் மிக மோசமான நிலைமை.

அரசியல் என்பது அரசியல்வாதிகளுக்கானது என்று யார் நினைத்தாலும் அதைவிட்ட மடமைத்தனம் வேறு எதுவுமாக இருக்க மாட்டாது.

உண்மை. அரசியல் மக்களுக்கானது. மக்களுக்கான அரசியலை மக்கள் சார்பில் நேர்மையான பாதையில் முன்னெடுத்துச் செல்பவர்கள்தான் அரசியல்வாதிகள்.

ஆக, மக்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்து அவர்களின் கருத்துக்களைப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டியது அரசியல்வாதிகளின் தார்மீகக் கடமை.

எனினும் நம் தமிழ் அரசியலில் மக்களின் விருப்பு வெறுப்புகள் முற்றுமுழுதாக ஓரங்கட்டப்படுகின்றன.

தாம் தாம் நினைப்பதே சரியானது என்ற அடிப்படையில் அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர்.

இவ்வாறான நிலைமை அரசியலில் இருந்து தமிழ் மக்களை வெளியேற வைக்கிறது.

இவ்வாறு தமிழ் மக்கள் அரசியலில் இருந்து அந்நியப்படுவதைப் பொருட்படுத்தாமல் இருந்தால் அது தமிழ் அரசியலை அடியோடு வேரறுத்து விடும்.

# தனியார்துறை ஊழியர்களிற்கும் ஓய்வூதியத் திட்டம் அறிமுகம்

## ஜனாதிபதி வேட்பாளர் அநுர

(கொழும்பு)

கௌரவமான மகிழ்ச்சியான ஓய்வுவாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்காக தனியார் துறை ஊழியர்களிற்கு பங்களிப்பு ஓய்வுதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவோம் என்ற யோசனையை தேசிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளதாக அதன் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கமொன்றின் நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஓய்வு பெற்ற பலர் அவலம் நிறைந்த துன்பகரமான வாழ்க்கையை வாழ்கின்றனர் எனத் தெரிவித்துள்ள அவர் ஓய்வுபெற்ற பின்னர் அனைவரும் கௌரவமான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் உற்பத்திக்குத் தனியார் துறையினர் பெரும் பங்களிப்பு செய்கின்றனர், எவரும் இத்தனை வயது வரைதான் வேலை செய்யவேண்டும் என்ற ஒரு விடயம் உள்ளது. ஓய்வுபெற்ற பின்னர் அனைவரும் கௌரவமான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ வேண்டும் எனத் தெரிவித்துள்ளதுடன் தனியார் துறை ஊழியர்களிற்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்று எங்களிடம் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# தேர்தல் விளம்பரங்களை வாகனங்களில் ஒட்டக்கூடாது

## தேர்தல்கள் ஆணைக்குழு சாரதிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தல் வேட்பாளர்களை விளம்பரப்படுத்தும் ஸ்டிக்கர்களை வாகனங்களில் ஒட்டக்கூடாது என வாகன சாரதிகளுக்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பேருந்துகள், முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட தனியார் வாகனங்கள், பல்வேறு தேர்தல் வேட்பாளர்களின் படங்கள் மற்றும் சின்னங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களைக் காட்டுவது குறித்து ஆணைக்குழுவுக்கு ப்பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும் என்று குறிப்பிட்டுள்ள தேர்தல் ஆணையம், மோட்டார் வாகனங்களில் உள்ள அனைத்து அடையாளங்கள் மற்றும் ஸ்டிக்கர்களை உடனடியாக அகற்ற வேண்டும் என்று கூறியுள்ளது.

இந்த ஸ்டிக்கர்களை அகற்றுவதற்கு நாடளாவிய ரீதியில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## 75 மில்லியன் ரூபாவை நஷ்ட ஈடாக செலுத்திய பூஜித்த

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நஷ்டஈடாக 75 மில்லியன் ரூபாவை முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித்த ஜயசுந்தர செலுத்தியுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் 30 திகதி அவர் முழுத் தொகையினையும் செலுத்தி முடித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

எட்டுத்தவணைகளின் அடிப்படையில் அவர் இந்த நஷ்டஈட்டினைச் செலுத்தியுள்ளார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு விதிக்கப்பட்டிருந்த 100 மில்லியன் ரூபா நஷ்டஈட்டுத் தொகையும் செலுத்தப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி அவர் இந்தத் தொகையைச் செலுத்தியுள்ளார்.

2023 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும்பாதுகாப்புப் படைத் தலைவரும் போதிய உளவுத்துறையைப் பெற்றிருந்தும் ஈஸ்டர் ஞாயிறு தொடர் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதன் மூலம் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாவையும், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித்த ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன ஆகியோருக்கு தலா 75 மில்லியன் ரூபா தொகை நஷ்டஈடாகச்செலுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எவ்வாறெனினும், அரசபுலனாய்வுச்சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன இதுவரை தனது நஷ்டஈட்டை செலுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அம்பலாந்தோட்டை, மதயமலலந்த, கொக்கல்ல பிரதேசத்தில் நேற்று யானை தாக்கியதில் ஆணொருவர் உயிரிழந்துள்ளதாக அம்பலாந்தோட்டைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மதயமலலந்த பகுதியில் வசித்த மூன்று பிள்ளைகளின் தந்தையான [illegible] என்ற 48 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரவு யானைகள் கிராமத்திற்குள் புகுந்ததால், காலையில் காட்டு யானைகளை விரட்டுவதற்காக கிராம மக்களுடன் அந்த இடத்திற்குச் சென்ற போதே இந்தத் தாக்குதல் நடந்ததாகவும் குறித்த நபர் வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# நாடளாவிய ரீதியில் 708 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 708 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 702 ஆண்களும் 06 பெண்களும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 16 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 290 கிராம் 921 மில்லிகிராம் ஹெரோயின், 584 கிராம் 811 மில்லிகிராம் ஐஸ், 2003 கஞ்சா செடிகள் மற்றும் 900 கிராம் 588 மில்லிகிராம் கஞ்சா ஆகிய போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்



ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

08

சுவிஸ் அரசியல் முறைமையின் பலரையும் ஈர்த்த மற்றொரு பண்பு, உலக அரசியலில் அதன் அரசியல் நடுநிலைத் தன்மையும் அரசியல் உறுதித் தன்மையுமாகும். சுமார் 4 நூற்றாண்டுகளாக நடுநிலைமைக் கொள்கையை சுவிஸ் கடைப்பிடித்து வருகின்றது.

17 ஆம் நூற்றாண்டின் மதங்களுக்கிடையிலான போரின்போதும் 20 ஆம் நூற்றாண்டின் இரு உலக மகா யுத்தங்களின் போதும் எந்த அணியையும் சாராது கடுமையான நடுநிலைமைக் கொள்கையை சுவிஸ் பின்பற்றி வந்தது குறிப்பிடத்தக்கது. தரைப்படை மற்றும் விமானப் படைகளை கொண்ட நாடு. நாட்டில் கட்டாய இராணுவச் சேர்க்கை உண்டு. சுவிட்சர்லாந்து நிலத்தால் சூழப்பட்ட நாடாக இருப்பதால் இங்கு கப்பல்படை இல்லை.

இந் நாடு 1291 ஓகஸ்ட் 1 இல் விடுதலை அடைந்த செய்தி வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. இன்றுவரை சுவிட்சர்லாந்து ஓகஸ்ட் 1ஆம் நாளை தேசிய விடுமுறையாக கொண்டாடுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். 1291இல் சுதந்திரமடைந்த சுவிஸ் 1499 செப்ரெம்பர் 22 இல் அங்கீகாரமற்ற கட்டமைப்புடன் ஆட்சி செய்த போதிலும் 1648 ஒக்டோபர் 24 இல் அங்கீகரிக்கப்பட்டது.

சுவிட்சர்லாந்து 1848 செப்ரெம்பர் 12 இல் இருந்து இன்றைய காலம் வரையுள்ள நடைமுறைக்கு வந்த சமஷ்டி கட்டமைப்பின் இடையில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. 1291இல் விடுதலை அடைந்த போதிலும் இன்றைய மத்திய சுவிட்சர்லாந்து நிலப்பகுதியை மட்டுமே நிலப்பரப்பாகக் கொண்டிருந்தது. பின்பு நாளடைவில் நில அபகரிப்பு காலம் காலமாக நடாத்தப்பட்டு 1848இல் எல்லைகள் வரையப்பட்ட பரந்த நவீன சுவிட்சர்லாந்து தோன்றியது.

சுவிட்சர்லாந்து 1848 இல் சுவிஸ் கூட்டாட்சி அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டதிலிருந்து தனது தற்போதைய வடிவத்தில் ஒரு நாடாக விளங்குகிறது. நவீன சுவிட்சர்லாந்தின் முன்னோடிகள் 13 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பாதுகாப்பான கூட்டணியை உருவாக்கியிருந்தனர், அதன் அமைப்பில் பல நூற்றாண்டுகளாக நிலைத்திருக்கின்ற பல மண்டலங்களின் ஒருங்கிணைப்பாக அது உருவாக்கப்பட்டது.

### சுவிட்சர்லாந்து மண்டலங்கள் பற்றி....

சுவிட்சர்லாந்து மண்டலங்கள் (கன்டன்) எனப்படும் 26 வெவ்வேறு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு மண்டலம் என்பது அமெரிக்காவில் உள்ள ஒரு மாநிலத்தைப் போன்றது.

ஆரம்ப காலத்தில், ஒவ்வொரு மண்டலமும் அதன் சொந்த இராணுவத்தையும் பணத்தையும் கொண்டிருந்தது. 1848 இல் சுவிட்சர்லாந்து சோண்டர்பண்ட் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பிறகு இப்போது இருக்கும் கட்டமைப்பிற்கு மாறியது.

உரி , ஷ்விஸ், அன்டர்வால்டன் (Nidwalden மற்றும் Obwalden ஒன்றாக Unterwalden என்று அழைக்கப்படுகின்றன) ஆகிய மண்டலங்கள் உர்கண்டன் என்று அழைக்கப்படுகின்றன. உர்கண்டன் என்பது 1291 இல் சுவிட்சர்லாந்து நிறுவப்பட்டதிலிருந்து இருந்த ஒரு மண்டலமாகும்.

காலப்போக்கில், மற்ற மண்டலங்களும் சுவிட்சர்லாந்தில் இணைந்தன. ஜுரா 1978 முதல் சுவிட்சர்லாந்தின் புதிய மண்டலமாகும். அந்த ஆண்டில், சில கலவரங்களுக்குப் பிறகு, அது பெர்ன் மண்டலத்திலிருந்து பிரிந்தது.

Basel-Stadt, Basel-Landschaft, Appenzell Innerrhoden, Appenzell-Ausserrhoden, Obwalden மற்றும் Nidwalden ஆகிய ஆறு மண்டலங்கள் மற்றவற்றிலிருந்து ஒரு வகையில் வேறுபட்டவை. வரலாற்றுக் காரணங்களுக்காக தேசியத் தேர்தல்களில் அவர்களின் வாக்கு வித்தியாசமாக எண்ணப்படுகிறது. மற்றைய எல்லா விடயங்களிலும் அவர்கள் மற்றவர்களைப் போலவே இருக்கிறார்கள்.

சுவிட்சர்லாந்தில், தனிப்பட்ட நகராட்சிகள் மற்றும் மண்டலங்கள் மிகவும் சுதந்திரமாக உள்ளன. பொதுவாக, சுவிஸ் சட்டம் முழு கூட்டமைப்பு (confederation) மட்டத்தில் உள்ளது. பெரும்பாலும் இது பொதுவான விடயங்களைக் கூறுகிறது மற்றும் மண்டலங்கள் இந்த விதியைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுகிறது.

மண்டலங்கள் பின்னர் விரிவான விதிகளை உருவாக்குகின்றன, ஒவ்வொன்றும் தமக்கு பொருத்தமானவற்றை உருவாக்குகின்றன. சில நேரங்களில் இது விசித்திரமான சூழ்நிலைகளுக்கு வழிவகுக்கிறது. மண்டலங்கள் 26 இலும் வெவ்வேறு பள்ளிக் கல்வி முறைகள் உள்ளன.

ஒவ்வொரு மண்டலமும் தங்கள் சொந்த கல்வி, சுகாதாரம், வரி விதம் மற்றும் சமூக நலனை நிர்வகிக்கிறது. நீங்கள் எந்த மண்டலத்தில் இருக்கிறீர்கள் என்பதன் அடிப்படையில் வெவ்வேறு அதிகாரப்பூர்வ மொழிகளும் உள்ளன. ஆனால் பொதுவாக ஜேர்மன், பிரஞ்சு அல்லது இத்தாலிய மொழிகள் பேசப்படுகின்றன.

ஒவ்வொரு மண்டலத்திற்கும் அதன் சொந்த அரசாங்கம் மற்றும் அரசியலமைப்பு உள்ளது. இது கூட்டாட்சி என்று அழைக்கப்படுகிறது. அரசியலமைப்பு ஒரு மண்டலத்தின் மிக உயர்ந்த சட்டம் ஆகும்.

கூட்டாட்சி மண்டலங்களின் பெயர்களும் அவை கூட்டாச்சியில் நுழைந்த ஆண்டும் கீழே தரப்பட்டுள்ளன.

Uri(1291), Schwyz(1291), Obwalden (1291), Nidwalden(1291), Lucerne(1332), Zurich (1351), Glarus (1352), Zug (1352), Bern (1353),Fribourg (1481), Solothurn (1481), Basel-Stadt (1501), Basel-Landschaft (1501), Schaffhausen (1501), Appenzell Ausserrhoden (1513), Appenzell Innerrhoden (1513), St. Gallen (1803), Graubünden (1803), Aargau (1803), Thurgau (1803), Ticino (1803), Vaud (1803), Valais (1815), Neuchâtel (1815), Geneva (1815), Jura(1979)

### பழைய சுவிஸ் கூட்டமைப்பு

பழைய சுவிஸ் கூட்டமைப்பு என்பது மத்திய அல்ப்ஸ் பள்ளத்தாக்கு சமூகங்களின் கூட்டமைப்பாகும். பொது விவகாரங்களின் மேலாண்மை (தடையில்லா வர்த்தகம்) மற்றும் முக்கிய மலை வர்த்தகப் பாதைகளில் அமைதியைப் பராமரித்தல் போன்றவற்றுக்கு இக்கூட்டமைப்பு மிகவும் உதவிகரமாக இருந்தது.

உரி, ஸ்விஸ், மற்றும் நிட்வால்டென் ஆகிய பகுதிகளின் நகர சுய ஆட்சிப்பகுதிகளுக்கு இடையிலான 1291 இன் கூட்டாட்சி அதிகாரப் பத்திரமே, கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதற்கான ஆவணமாகக் கருதப்படுகிறது. இருப்பினும் இது போன்ற உடன்பாடுகள் முந்தைய தசாப்தங்களிலும் இருந்தன.

1350களில் மூன்று அசல் மண்டலங்கள் க்ளாரஸ் மற்றும் ஜுக மற்றும் லூசெர்ன் ஜுரிச் மற்றும் பெர்ன் ஆகிய மண்டலங்களுடன் (பிராந்தியங்களுடன்) இணைந்து எட்டு மண்டலங்களின் "பழைய கூட்டமைப்பை" உருவாக்கின. இவை 15 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இருந்தன. இந்த விரிவாக்கம் கூட்டமைப்பின் ஆற்றல் மற்றும் செல்வ வளர்ச்சிக்கு வழிகோலியது.

1460 இல், அல்ப்ஸின் தெற்கு மற்றும் மேற்கிலுள்ள ரைன் நதிப் பகுதியின் பெரும்பாலான பகுதி மற்றும் ஜுரா மலைகள் ஆகிய பெரும்பாலான பகுதிகள் இந்த கூட்டமைப்பினர் கட்டுப்பாட்டில் இருந்தது. குறிப்பாக 1470களின் போது பர்கண்டியின் மாவீரன் சார்லஸின் தலைமையில் ஹப்ஸ்பர்க்ஸ்க்கு (செம்பாக் யுத்தம், நேஃபெல்ஸ் யுத்தம்) எதிரான வெற்றிக்குப் பின்னரும் சுவிஸ் கூலிப்படைகளின் வெற்றிக்குப் பின்னரும் இது முக்கியமாக நிகழ்ந்தது.

1499 இல் பேரரசர் முதலாம் மேக்ஸிமில்லருடைய ஸ்வாபியன் கூட்டமைப்புக்கு எதிரான ஸ்வாபியன் போரில் சுவிஸின் வெற்றி புனித ரோமானியப் பேரரசிலிருந்து உண்மையான விடுதலையாக கருதப்படுகிறது.

இந்த முந்தைய போர்களின் போது பழைய சுவிஸ் கூட்டமைப்பு தோற்கடிக்க முடியாத நாடு என்ற நற்பெயரைப் பெற்றிருந்தது. ஆனால் 1515 இல் மாரிக்னனோ யுத்தத்தில் சுவிஸ் தோற்கடிக்கப்பட்டதால் ஏற்பட்ட பின்னடைவில் கூட்டமைப்பின் விரிவாக்கம் பாதிக்கப்பட்டது. இதனால் "வீரமிகு" என்றழைக்கப்பட்ட சுவிஸ் வரலாற்று காலகட்டம் முடிவுக்கு வந்தது.

சில மண்டலங்களில் ஸ்விங்லியின் சீர்திருத்ததின் வெற்றி, 1529 மற்றும் 1531 இல் மண்டலங்களிடையேயான போர்களுக்கு வழிவகுத்தது (கேப்பெல்லெர் கிரீக் ). இந்த உள்நாட்டுப் போர்கள் நடைபெற்ற நூறாண்டுகளுக்குள், அதாவது 1648 இல், வெஸ்ட்பாலியா உடன்படிக்கையின் கீழ், புனித ரோமானியப் பேரரசின் கீழிருந்து சுவிட்சர்லாந்தின் விடுதலையை மற்றும் அதன் நடுநிலைத்தன்மை ஆகியவற்றை ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக்கொண்டன.

முந்தைய நவீன கால சுவிஸ் வரலாற்றின் போது, பாட்ரிசியேட் குடும்பங்களின் சர்வாதிகாரவாதத்தின் வளர்ச்சி மற்றும் முப்பதாண்டுப் போரினால் எழுந்த நிதி நெருக்கடி போன்றவை இணைந்து 1653 இல் சுவிஸ் உழவர் போருக்கு வழிவகுத்தது. இந்த போராட்டத்தின் பின்புலத்தில், கத்தோலிக்க மற்றும் புராட்டஸ்தாந்துகள் மண்டலங்களிடையே போராட்டங்களும் நடைபெற்றன. எ இது 1656 மற்றும் 1712 இல் வில்மெர்கன் யுத்தங்களில் மேலும் வன்முறையாக வெடித்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

டும் ஆரம்பிக்கப்படும்.

இந்நிலையில், வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் 18ஆம் திகதி பாடசாலை முடிவடையும் நேரத்திற்குப் பின்னர் கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மோ.சை...

ழுந்தவராவார்.

கடந்த 5ஆம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சென்றுவிட்டு, வல்லிபுரப் பரியாரியார் வீதிக்குச் செல்லும் பிரதான வீதியைக் கடக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிள் ஒன்று அவரை மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து மீண்டும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை முற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## ஐரோப்பிய...

நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். ஆளுநரின் யாழ்ப்பாணத்திலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வடக்கு மாகாணத்தின் கள நிலைவரங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என ஆளுநர் இதன்போது கூறினார். அமைதியான முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்த ஆளுநர் அவர்கள், மக்கள் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினரிடம் தெளிவுபடுத்தினார்.(ம-7)

## குடும்பஸ்தர்...

வட்டாரத்தைச் சேர்ந்த சோதிலிங்கம் கஜேந்திரன் (வயது-43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த பகுதியின் புதிதாகக் கட்டுமானம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு நிர்மாணிக்கப்படும் கட்டுமானத்திற்கு அருகாமையில் குறித்த நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவரின் உடலில் அடிகாயங்கள் காணப்பட்டுள்ளன. அத்துடன் கட்டுமானத்தில் இரத்தக் கறைகளும் காணப்பட்டுள்ளன. இந் நிலையில் குறித்த நபர் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் எனப் பொலிஸாரால் சந்தேகிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## மனித உரிமைகள்...

அமர்வு நேற்று ஜெனிவாவில் ஆரம்பமானது.

இதன் போது இலங்கையின் பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொள்கின்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை கவலை தெரிவித்தது.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகத்துக்கான இலங்கையின் பிரதிநிதி ஹிமாலி அருணாதிலக்க இந்தக் கருத்தைக் கூறியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையின் சில கருத்துக்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது.

இந்த அறிக்கை இலங்கை இதுவரையில் கண்ட முன்னேற்றங்களை அங்கீகரிக்கத் தவறியுள்ளது.

அத்துடன் இலங்கையின் எதிர்காலம் தொடர்பாகப் பாதகமான முன்னோட்டத்தை வழங்கி இருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இந்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட குற்றங்கள் தொடர்பாகச் சுட்டிக்காட்டத் தவறியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## இலங்கையில்...

பேரவையின் நேற்றைய அமர்வில் பிரிட்டனின் பிரதிநிதி இதனைத் தெரிவித்துள்ளார்.

சமூகங்களிற்கு இடையில் பதற்றத்தை அதிகரிக்கும் நிலத்தகராறு குறித்து சுட்டிக் காட்டியுள்ள பிரிட்டன் அதற்குத் தீர்வைக் காண வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

மனித உரிமை பேரவையுடன் இலங்கை மீண்டும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என பிரிட்டன் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-7)

## பொறுப்...

வித்துள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நோர்டிக் நாடுகள் சார்பில் உரையாற்றிய பின்லாந்து பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்காகவும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப் படுதலை முடிவிற்குக் கொண்டு வருவதற்காகவும் இலங்கை உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரைகளை ஆதரிப்பதாக பின்லாந்து தெரிவித்துள்ளது.(ம-7)

## சித்தி...

காண்பதற்குப் பக்கச் சார்பற்ற வெளிப்படையான அனைவரையும் உள்ளடக்கிய அணுகு முறைக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. (ம-7)

## வலம்...

வலம்புரி அலுவலகத்தைச் சுற்றிப் பார்த்த அவர்கள் புகைப்படமும் எடுத்துக்கொண்டனர். (ம-7)

# சஜித்தின் பேரணியில் வெடி விபத்து

## பொலிஸார் உட்பட 7 பேர் படுகாயம்

(கண்டி)

• ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து, கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக பேரணி ஆரம்பிக்கப்படுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்னதாக ஆதரவாளர்கள் பெருந்தொகையான பட்டாசுகளை வெடிக்கச் செய்ததில் ஐந்து பொலிஸார் உட்பட 7 பேர்படு காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் தற்போது கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புக் கடமைகளுக்காக நிறுத்தப்பட்டிருந்த 5 பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொதுமக்களில் இருவரும் படுகாயமடைந்தனர். (ம-7)

### மஹஜன சம்பத

திகதி 2024.09.09
சீட்டிழுப்பு இலக்கம் 5591
V 7 0 4 6 2 6
அத சம்பத V 4 6 2 6 சீட்டிழுப்பு இலக்கம் 166

### தன நிதானய

திகதி - 2024.09.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1621
H 15 53 55 78 H
Double Chance 26108

### மெகா பவர்

திகதி 09/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1939
T 06 04 12 36 54
99946

### லக்கி 7 VIP

திகதி 2024.09.09
சீட்டிழுப்பு இலக்கம் 417
N 2 7 4 5 0 8 N

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3833
சீட்டிழுப்பு திகதி 09.09.2024
C 15 17 18 41
C 58268

### ஹந்தஹன

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.09
சீட்டிழுப்பு இலக்கம் 900
கடகம் 15 25 26 62 கடகம்
01880 03

### சுபிர தன சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.09.2024 வெற்றி வாரம் 299 வர்ணம் ஊதா
L 9 8 2 2 6 7
57984
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,705,772.00

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2565 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 09.09.2024 தினம் திங்கள்
10 11 39 62 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,782,582.40

### சனிதா

திகதி 2024.09.09 வெற்றி வாரம் 4726
39 44 48 59 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,430,931.60
92795

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4277 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.09 தினம் திங்கட்கிழமை
06 13 56 62 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,061,183.60
121991

### ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்

R 08 19 35 68 74
1741 பச்சை 09.09.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 543,966,126.60

### ஜயோதா


திகதி 2024.09.09 வெற்றி வாரம் 2058 வர்ணம் செம்மஞ்சள்
09 17 62 63 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,257,460.40

### அத கோடிபதி

திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2391
சீட்டிழுப்பு திகதி : 2024.09.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,583,012.80
03 06 14 37 A
486795

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணி நமநாதன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

முன்னாள் காணி குடியேற்ற அதிகாரியும் பிரபல சட்டத்தரணியுமாகிய கனக சபாபதி நமநாதன் நேற்று முன்தினம் காலமானார். அவருக்கு வயது 86.

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைத் தலைவராக இருந்து கல்விப் பணியாற்றிய நமநாதன், சுதந்திரத்திற்குப் பின்பான இலங்கையின் அரசியலமைப்பு எனும் நூலை அண்மையில் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்தலுக்கான விசேட தினம்

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய விசேட தினமாக எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகள் விநியோகிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். (ம-7)


வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 17 37 684
(304)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-1152)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1153)
076 825 7716 (ஆகாஸ்)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 66 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்.
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை.
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்.
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- சீரான ஆவணங்கள்.
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்.
(1902)
பார்வையிடும் நேரம்
காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு :
077 623 4204 / 077 030 2523

A/L PHYSICS
English Medium
யாழ். ஆனைப்பந்திச் சந்தியில்....
T.Jinthujan
- Personal & Group Classes
- 1979 - 2023 Past paper unit wise Mcq, Str, Essay in English
- Weekly Exam will be conduct in English
PHYSICS DOMAIN INSTITUTE
T.P: 076 603 4895

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1152)

இந்தியன் விசா சேவைகள்
ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
(328)
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)


# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கார்த்திகேசு குணபாக்கியவதி**

தோற்றம் 09.07.1944 | மறைவு 23.08.2023

ஆறு இரண்டு திங்களாய்
ஆறாத எம் துயரம் மாறாத நினைவுடனே
வாழ்கின்றோம் உம் நினைவு அலைகளினால்
நீடூழி வாழ்வீர் என நினைவுகளில்
உற்றுநாமும் நியமதினில் வாழ்ந்திடவே
நீண்ட தூரம் சென்றதேனோ அம்மா!
வாழ்வின் உயர்வுக்காய், உதிரத்தை
ஈகையாக்கி எமை நிறைவுற வழிசமைத்தவரே
காலமதன் கட்டளையில் கைகோர்த்து
நின்றவரே, அமைதியாய், அடக்கமாய்
பணிவாய் வாழ்ந்த பெரும் பொருளே
உதிரத்தை உணவாக்கி உயிர்காத்த எம் பொருளே...

சிற்றம்பலம் வீதி,
உசன், மிருசுவில். (327)

மீளாத் துயருடன்...
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.